Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-16 29-03-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 39


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M. சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247
(சி-11455)

## சுமாத்திராவில் மீண்டும் கடலடிப் பூகம்பம்

# தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுனாமி எச்சரிக்கையால் பெரும் பதற்றம்

## நள்ளிரவில் மக்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

**இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவிற்கு வடக்கே நேற்றிரவு ஏற்பட்ட கடலடிப் பூகம் பத்தினால் சுனாமிப்பேரலைகள் தாக்கலாமென தெற்கு, தென்கிழக்கு ஆசியாவில் நேற்றிரவு பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.**

தமிழர்தாயக நேரப்படி இரவு 10.00 மணியளவில் ஏற்பட்ட இப்பூகம்பம், ரிச்டர் அளவு கோலில்8.7 அளவில் பதிவாகியது. இப்பூகம்பத்தினால், சுனாமி அலைகள் கரையோரங்களைத் தாக்கலாம் என எழுந்த அச்சம் காரணமாகவே இப்பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பூகம்பமானது கடந்த ஆண்டு நிகழ்ந்த பிரதேசத்திற்குத் சற்றுத் தெற்காக ஏற்பட்டுள்ளது. முதலில் இப்பூகம்பத்தின் அளவீடு 8.5 என அறிவித்த போதும், அமெரிக்க புவிச்சரிதவியல் நிலையம் இறுதி யாக அறிவித்த தகவலின்படி 8.7 எனத் தெரிவித் துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை வெளியேற்றுவதில் புலிகள் துரித நடவடிக்கை

(நமது நிருபர்)

சுனாமி பேரலைகள் தமிழர் தாய கத்தை தாக்கக் கூடும் என்ற தகவல் கிடைத்தமையடுத்து புலிகளும், பொது அமைப்புக்களைச்சேர்ந் தோரும் துரிதநடவடிக்கைகளை மேற் கொண்டு மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சுனாமி தாக்கலாம் என்ற தகவல் கிடைக்கப்பெற்றதும் வானொலி மூலம் மக்களுக்கு எச்சரிக்கை விடுக் கப்பட் அதேவேளை, மக்களை பாது காப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

சுனாமிப் பேரலைத்தாக்கம் ஏற்பட லாம் என்ற அறிவிப்பு வெளியா னதை அடுத்து வடமராட்சி கிழக்கு பகுதி மக்கள் அப்பகுதிகளில் இருந்து இரவோடு இரவாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.


தாளையடி, ஆழியவளை உடுத் துறை, வெற்றிலைக்கேணி பகுதிகளில் உள்ள மக்கள் அங்கிருந்து பளைப் பகுதியை நோக்கி வெளியேறி

(12ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் குரலின் விசேடசேவை

சுனாமிப் பேரனர்த்தம் ஏற்படும் என்ற எச்சரிக்கை வெளியான நேரம் தொடக்கம் புலிகளின் குரல் தனது விசேட சேவைமூலம் மக்களுக்கான அறிவித்தல்களை விடுத்த வண் ணமிருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)


மக்கள் வெளியேற்றம்

## இலங்கையின் பல பகுதிகளிலும் மக்கள் பதற்றத்துடன் வெளியேற்றம்!

(கொழும்பு)

சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து இலங்கையின் பல பகுதிகளிலும் மக்கள் பாதுகாப்புக் கருதி கரையோரங்களில் இருந்து உள்பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமிப் பேரலை காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் பெரும் பதற்றத்துடன் பாதுகாப்பான இடங் களை நோக்கி நகர்ந்துள்ளதாகவும், அவர்கள் மத்தியில் சுனாமி குறித்து பெரும் பதற்றம் நிலவியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு வீதிகளில் நெரிசல்கள் ஏற்பட்டதாகவும், மக்கள் கரையோரங்களை விட்டு வெளியேறுவதில் முண்டியடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சுனாமி வாய்ப்பு இல்லை; அதிகாலைத் தகவல்கள் தெரிவிப்பு

சுனாமி அனர்த்தம் ஏதும் தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென அதிகாலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.இதேவேளை கோக்காய் தீவில் சிறிதளவு சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதாகத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.நேற்று இரவு ஏற்பட்ட பூமிய திர்வு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை உடனடியாகக் கூடி ஆராய்ந்துள் ளது.தொடர்ந்து அங்கத்துவ நாடுகளுடன் தொடர்பு கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நியாஸ்தீவில் பெரும் சேதம் நகர் 75 வீதம் அழிவு

(லண்டன்)

இந்தோனோஷியாவில் சுமத்திராத் தீவுகளுக்கு அண்மையாக ஏற்பட்ட கடலடிப் பூகம்பத்தினால் நியாஸ் தீவில் பிரதான நகரங்களில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நகரில் 75 சதவீதம் அழிவிற்குள்ளாகியுள்ளதாகவும் பல டசின்கணக்கான மக்கள் பலியாகி யுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

## மட்டு. புலிபாய்ந்த கல் பகுதியில் இருபோராளிகள் வெட்டிக்கொலை

26.03.2005 அன்று இரவு 7.00 மணியளவில் புலிபாய்ந்தகல் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமொன்றுக்கு உணவு கொடுத்து விட்டு திரும்பிய வாகனத்தை ஐந்தாம் கட்டையில் வைத்து வழிமறித்துவாகனத்தில் வந்த போராளிகளை வெட்டிக்கொன்றுள்ளனர். கருணாகுழுவும் இராணு வத்தினரும் இணைந்து இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். மேஜர் புகழமுதன்(கிட்ணபிள்ளை சிவநேசன் புதுக்குளம் கரவெட்டி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையினரின் தாக்குதலில் குயிலின்பன் உட்பட பத்துப்பேர் படுகாயம்

அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட பத்துப்பேர் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்றுத் தாக் கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் திருக்கோயில் பிர தேசத்தில் உள்ள மண்டானா அகதி முகாமில் பிற்பகல் இடம்பெற்றது. நேற்று முற்பகல் மண்டானா அகதி முகாமிற்குச் சென்ற போராளி ஒரு வரை மறித்த சிறிலங்கா சிறப்பு அதிர டிப்படையினர் அகதிமுகாமுக்குள் செல்லவிடாது தடுத்து நிறுத்தினர். இதனையடுத்து இது தொடர்பாக விசாரிக்க மண்டானா அகதிமுகாமிற் குச் சென்ற குயிலின்பன் உட்பட்ட போராளிகளை சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்திக் கெடுபிடிகளை மேற்கொண்டனர்.

அத்துடன் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் குயிலின்பன் உட்பட பத்துப்பேரைத் துப்பாக்கி முனையில் கடுமையாகத் தாக்கி யுள்ளனர். காயமடைந்த போராளிகள் திருக்கோயில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சை களுக்காக கல்முனை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## வவு.அரசியல் துறை செயலகம் மீதான கைக்குண்டு வீச்சில் மூவர் காயம்

வவுனியா வைரவப்புளியங் குளத்தில் உள்ள தமிழீழ விடு தலைப்புலிகளின் அரசியல் துறைச் செயலகம் மீது நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட கிரனேட் வீச்சில் மூவர் காயமடைந்துள்ள தாக வவுனியாப் பொலிசார் கூறி யுள்ளனர்.

வைரவப்புளியங்குளம் புகை யிரத நிலைய வீதியில் அமைந் துள்ள இந்த முகாம் மீது கிரனேட் வீச்சு மேற்கொள்ளப்பட்ட சமயம் அலுவலக முற்றத்தைத் துப்புரவு செய்து கொண்டிருந்த இரண்டு அலுவலகப் பணியாளர்களும் அருகிலுள்ள இயந்திர மரவேலை பயிற்சிப் பட்டறையின் காவலாளி ஒருவருமே இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்தனர். இவர்கள் மூவரும் வவுனியா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். கிரனேட் வீச்சில் காயமடைந்த வர்கள் கிரனேட் வீசியவரைத் துரத்திச்சென்றதாகவும் அப்போது மேலும் ஒரு கிரனேட்டை வீச முற்பட்டதனால் அவர்கள் தங்கள் முயற்சியைக் கைவிட்டதாகவும் பொலிசார் கூறியுள்ளார்.

இதேவேளை இச்சம்பவம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தென்னந் தோட்டம் தேவை

A-9 வீதியில் கொடிகாமம் தொடக்கம் இயக்கச்சி வரை உள்ள பிரதேசத்தில் தென்னந்தோட்டம் அல்லது அதற்கேற்ற வெற்றுக்காணி உடனடித் தேவையாக உள்ளது. தொடர்பு அ.லோகராஜா No130 A,பெரியார் குளம்,பூந்தோட்டம், வவுனியா. T.P. 0244589221 (5872)

### காணி விற்பனைக்கு

நல்ல நீர் வளமும் நிலவளமும் போக்குவரத்து வசதியும் அமைதியான சூழல் அமைந்ததும் கிளிநொச்சி நகரிலிருந்து 1 1/2கி.மீ தூரத்திலுள்ளதுமான திருவையாற்றில் அமைந்துள்ள 1/2 ஏக்கர் விஸ்தீரணமுள்ளநான்குதுண்டுக்காணிகள் விற்பனைக்குண்டுதொடர்புT.P. 0773164615. (5896)

### தவறிவிட்டது

ஜெகதீஸ்வரன் ஜெயகரன் (திருநெல்வேலி யாழ்ப்பாணம்) என்பவருடைய கடவுச்சீட்டு புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவிலடியில் 25.03.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எழில்நிலா ஸ்ரூடியோ இல: 67/1 விசுவமடுவில் ஒப்படைக்கவும். தொடர்புகளுக்கு HP 0776623799 (5892)

### தவறிவிட்டது

26.03.2005 அன்று காலை 7.00 மணியளவில் புளியம்பொக்கணையில் இருந்து வரும் போது ஏ.கபிரியேல் (கண்ணன்) என்பவரின் சிறுதொகைப்பணமும் பொருட்களும் அடங்கிய பொதி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் முரசுமோட்டைஇரண்டாம் கட்டை எனும் முகவரிக்கு அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகவல்:- ஏ.கண்ணன். (5895)

### தவறிவிட்டது

அ.கரிகாலன்(போராளி) என்பவருடைய மோட்டார்சைக்கிளின் ஆவணங்கள் N.P JG 7268 கையடக்க தொலைபேசியுடன் பிரயாணப்பை 24.03.2005 அன்று பி.ப 4.00 மணியளவில் புதூர்ச்சந்திக்கும் புளியங்குளம் சோதனைச் சாவடிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம்பணிமனை கிளிநொச்சி/நந்தவனம் கிளிநொச்சியில் அல்லதுதொலைபேசி இல.021-2285704யுடன் தொடர்பு கொள்ளவும். (5891)


# வீதி விபத்துக்களினால் அதிகம் பாடசாலை மாணவர்களே பாதிப்பு!

## -வாகனப்போக்குவரத்துப் பிரிவு பொறுப்பாளர் சி.பிரதீப்குமார்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான வீதிகளில் அதிகரித்துக் காணப்படும் வாகனப்போக்குவரத்தினால் மாணவ சமூகம் குறிப்பாக இளம் வயதுடையவர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை அதிகமாக காணப்படுகின்றது எனதமிழீழ காவல்துறையின்புதுக்குடியிருப்பு வாகனப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

உடையார் கட்டு மாகவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர் மத்தியில் வீதி ஒழுங்கு விதிகள் பற்றிய அறிமுகத்தை கடந்த புதன் கிழமையன்று வழங்கி சிறப்புரையாற்றும் போதே பொறுப்பாளரினால் மேற்படி கருத்து முன்வைக்கப்பட்டது.

இப்பேராபத்தில் இருந்து சிறுவர்களைக் காப்பாற்றும் பொறுப்புடன் காவல்துறையினருடன் வாகனச்சாரதிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தின் அனைத்து தரப்பினரும் கூட்டாக ஏற்று இணைந்து செயற்பட வேண்டும்.

அத்துடன் நடைபெற்ற விபத்தை விசாரித்து நீதி செலுத்தும் நடவடிக்கைக்கு முன்பாக விபத்து நடைபெறுவதைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளை, முக்கியமாக வீதியைப் பாவிக்கும் அனைத்து தரப்பினருக்கும் வீதிஒழுங்குவிதிகள் மற்றும்விபத்துத் தடுப்பு, சம்பந்தமான கருத்தூட்டல் நிகழ்வுகளை தொடர்ச்சியாக



நாம்நடத்தி வருகின்றோம் என அவர்மேலும்தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பெருமளவான மாணவர்களும், ஆசிரியர்களும் பங்குபற்றி பயனடைந்தது குறிப்பிடத்தக்கது. (சோ)

# காத்தார் சின்னக் குளத்தில் கசிப்புடன் பெண் கைது

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா காத்தார் சின்னக் குளம் என்னும்இடத்தில் மூன்றரைப் போத்தல் கசிப்புடன் பெண்ணொருவரை வவுனியா பொலிசார் கைது செய்துள்ளனர்.

காத்தார் சின்னக்குளம் கிராமத்தில் பொலிசார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே இப் பெண்கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட இப் பெண் நேற்றுவவுனியா நீதவான் நீதிமன்றில்முற்படுத்தப்பட்டபோது விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி மா.இளஞ்செழியன் ஒரு மாத சிறைத் தண்டனையும், நானகாயிரம்ரூபாதண்டப்பணமும் செலுத்துமாறுதீர்ப்பளித்தார். (10)

# மரபணு பரிசோதனை அடிப்படையில் வவுனியா நீதவான் நீதிமன்றில் தீர்ப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா நீதவான் நீதி மன்றில் நேற்று மரபணுப் பரிசோதனை ரீதியான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.


வவுனியா நீதவான் நீதிமன்றில் நேற்று நடைபெற்ற தாபரிப்பு வழக்கின் தீர்ப்பில் குற்றம் சுமத்தப்பட்ட இருவர் மரபணுப் பரிசோதனை சாட்சியங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு செலவுப் பணத்துடன் மாதந்தோறும் தாபரிப்புப் பணம் செலுத்த வேண்டும் எனவும் நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பு வழங்கி உள்ளார்.

குறிப்பிட்டவழக்கொன்றில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு 84 ஆயிரம் ரூபா செலவுப் பணமாகவும், மூவாயிரத்து ஐநூறு ரூபா மாதந்தோறும் தாபரிப்புப் பணமாகவும் செலுத்தவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது.

இரண்டாவது வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 24 ஆயிரம் ரூபா செலவுப் பணமாகவும் மூவாயிரம் ரூபா மாதம் தோறும் தாபரிப்புப் பணமாகவும் செலுத்த வேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது.

வவுனியா நீதவான் நீதிமன்றில் நான்கு தாபரிப்பு வழக்குகளில் சடங்கு முறைப்படியோ சட்டப்படியோ திருமணம் செய்யாமல் குழந்தைகளைப் பெற்ற நான்கு இளம் பெண்கள், அவர்கள் பெற்றெடுத்த குழந்தைகள், குழந்தைகளின் தந்தையர்கள் என 12 பேரை மரபணுப்பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் இதற்கான ஒழுங்குகளை சட்டத்தரணிகளான நடராஜா, சுதர்சன் ஆகிய இருவரையும் மேற்கொள்ளுமாறு நீதிபதி மா. இளஞ்செழியன் உத்தவிட்ட தற்கமைய வைத்தியர்களான மாயா குணசேகரயா, ஆர்.ரணவக்க ஆகியோர் மரபணுப்பரி சோதனையை மேற்கெண்டு அறிக்கை சமர்ப்பித்ததற்கமைய குற்றவாளிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

.மரபணுப் பரிசோதனை மூலம் இனங்காணப்பட்ட தந்தையர்கள் இவர்கள்தான்என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் குறிப்பிட்ட இரண்டு பிள்ளைகளுக்கும் பிறப்புச் சான்றிதழை உரியமுறைப்படிபெற்று வழங்குமாறும்நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார். (10).




பொருண்மிய மதியுரையக தொழில்நுட்ப பூங்கா அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுக் காலை 11.00 மணிக்கு அறிவியல் நகர் ஐந்தாம் குறுக்குத்தெருவில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். (படம்:~சோதி)

## வீட்டுக்கடன் வழங்கல்

(வவுனியா செய்தியாளர்)

அரசாங்க ஊழியர்களுக்கு குறைந்தவட்டியில் ஒரு மில்லியன் ரூபா வீட்டுக் கடனாக வழங்கப்பட உள்ளதாக பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

நான்குவீதவட்டியுடன் வழங்கப்படும் இக் கடன் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வருமென அவர் மேலும்தெரிவித்துள்ளார். (10)


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## பயணியர் புதிய பேருந்துப் பணி

மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்கள். பொதுமக்களின் வேண்டுகைக்கு அமைவாக. 1.04.2005 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

### கிளிநொச்சி–புளியங்குளம்

நேர ஒழுங்கு

| கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|
| காலை 09.00 | 09.20-09.40 | 10.15. | 11.00 |

### புளியங்குளம்–கிளிநொச்சி

நேர ஒழுங்கு

| புளியங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| மாலை 03.00 | 03.45 | 04.20-4.40 | 05.00 |


முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
கிளிநொச்சி.

(சி.11612)


# முத்துஐயன்கட்டு பாடசாலையில் இன்று நூல்நிலையம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு முத்து ஐயன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலையில் வடக்கு கிழக்கு கல்வி அமைச்சினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூல் நிலையம் இன்று காலை 9.00மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப் படவுள்ளது.



இந் நூல்நிலையமானது வடக்கு கிழக்கு கல்விஅமைச்சினால் பதினெட்டுஇலட்சம்ரூபா செலவில்கட்டிமுடிக்கப் பெற்றதாகும் இந்நூல் நிலைய திறப்பு விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ,கல்வி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சு செயலாளர் ஆர்.தியாகலிங்கம் ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (கு)

# நேற்றைய வடமராட்சிப் பேரணியில்....



(படப்பிடிப்பு - தயாபரன்)

# இடைக்கால அரசு தொடர்பாக உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்குக

## வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்

(வடமராட்சி)

**எமது மனித உணர்வுகளை மதித்து அதனை நடைமுறைப்படுத்த தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அரசு தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமென வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நேற்று வடமராட்சியில் இடம்பெற்ற பேரணியின் முடிவில் சிறிலங்கா சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட மகஜரிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உயர் பாதுகாப்பு வலயங்களை மீண்டும் பலப்படுத்துவதும், பயன்தரு விளைநிலங்கள் ஆக்கிரமிப்பதும் கடற்றொழில் செய்வதற்கு கட்டுப்பாடுகள் உருவாக்குவதும், எமது ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொலை செய்வதும், பொதுமக்கள் மீது இராணுவ அடாவடித்தனங்களை நடாத்துவதும், பெண்கள் மீது பாலியல் வல்லுறவு மேற்கொள்ள எத்தனிப்பதும், உயர் பாடசாலைகளை உயர் பாதுகாப்பு வலயமாக்கியிருப்பதும், சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளில் எம்மைப் புறக்கணித்துள்ளமையும் பொதுக்கட்டமைப்புகளில் புரிந்துணர்வு இல்லாமையும். இந்நிலையிலும் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பும், பயிற்சி வழங்கலும், இராணுவ தளபாடக் கொள்வனவுகள் என்பன தொடர்வதும் மீண்டும் எம்மீது தாங்கள் போரைத் தொடுப்பதற்கான தயார்ப்படுத்தல்களின் செயற்பாடகவே கருத முடிகிறது.

இவ்வாறான சூழலைப் புறம் தள்ளி தமிழ்மக்கள் தமது சொந்த மண்ணில் நிம்மதியான சுதந்திரமான அச்சமற்ற வாழ்க்கையை வாழ உடனடியாக கீழ்வரும் நடவடிக் கைகளை மேற்கொண்டு உதவும் பட்சத்திலேயே தங்களை நாம் நம்பும் நிலை தோன்றும்.

*இடம்பெயர்ந்து பல் லாண்டு அவலவாழ்வு வாழும் மக்களின் துயர்போக்க உடன் உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றல்,

* கட்டுப்பாடற்ற நிலையில் கடற்றொழில் செய்ய அனுமதி அளித்தல்,

*உயர்கல்வி நிலையத்தில் உயர்பாதுகாப்பை அகற்றி மாணவரின அச்சமற்ற கற்றலுக்கு வசதி செய்தல்,

*தமிழ்மக்கள் அடிப்படை மனித உரிமைகளை அனுபவித்து மக்கள் குடியிருப்பின் அருகில் உள்ள படைநிலைகளை அகற்றுதல்,

எமது மனித உணர்வுகளை மதித்து மேற்குறித்தவற்றை நடைமுறைப்படுத்த தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அரசு தொடர்பாக பேச்சை ஆரம்பிக்க வேண்டும். இவற்றிற்கு தாங்கள் முக்கியத்துவமளிக்கத் தவறின் மிகுந்த மனவிரக்தியுடன் வாழும் நாம் எமது சொந்த நிலத்தில் வலிந்து போராடி வாழ வேண்டிய நிலை ஏற்படும், இதனால் நாமும் படைகளும் உயிர்ச்சேதங்களுக்கு உள்ளாகலாம். இது எமது உரிமைப் போராகையால் உணர்வுடன் உயிரை இழந்தேனும் எமது நிலத்தைப் பெறுவோம். இவ் அவல நிலையைப் போக்க தாங்கள் உடனடியாக நடவடிக் கையில் இறங்கிச் செயற்படவேண்டுமென வினையமாகக் கூறுகின்றோம் என அம்மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (33)

## சட்டவிரோத மணல் அகழ்வு

(தென்மராட்ச)

யாழ். தென்மராட்சியின் மந்துவில் வடக்குப் பிரதேசத்தில் உள்ள தனியார் காணிகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் மணல் அகழப் பட்டு வருகின்றது.

இப்பகுதியில் அண்மைக்காலமாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் மணல் அகழ்வுகளால் இங்குள்ள தனியார் காணிகள் பலவற்றிலும் பாரியளவு குழிகள் ஏற்பட்டுள்ளன.

தினமும் இப்பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம் பெற்று வருகின்றபோதும் சிறிலங்காப் பொலிசார் இது குறித்து நடவடிக்கை எடுக்காது அசமந்தப் போக்குடன் நடந்து கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர் (33)

## மாணவர்கள் சுற்றுலா

(அலுவலக செய்தியாளர்)

யாழ். பருத்தித்துறை புற்றலை மகாவித்தியாலய மாணவ மாணவிகள் கடந்த சனிக்கிழமை வன்னிப்பகுதிக்கு சுற்றுலா மேற்



கொண்டு வன்னிப்பகுதியிலுள்ள முக்கிய பகுதிகளைப்பார்வையிட்டனர்.மேற்படி வித்தியாலயத்தைச் சேர்ந்த 14 ஆசிரியர்களும் 89 மாணவர்களும் வன்னிப்பகுதி, சுற்றுலாவின்போது ஆனையிறவு உப்பளம், இரணைமடுக்குளம், செஞ்சோலை, மாவீரர் துயிலுமில்லம், தமிழீழ நீதிமன்று, விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் ஆகியவற்றை பார்வையிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது (சோ)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் தொலைபேசி வசதிகள் இல்லை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர ஆதார வைத்தியசாலைக்கு இதுவரை தொலைபேசி வசதிகள் எதுவும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லையென வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். தொலைபேசி வசதிகள இல்லாத காரணத்தினால் வைத்தியசாலை நிர்வாக நடவடிக்கைகளை மேற் கொள்வதிலும் மற்றும் பொதுமக்கள் வைத்தியசாலையுடன் தொடர்புகளைப் பேணுவதிலும் பல நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இவ்வைத்தியசாலைக்கு விரைவாக தொலைபேசி வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (28)

## - யாழ்.பல்கலைக்கழகத்தின் - கல்விசாரா ஊழியர்கள் நேற்றும் வேலை பகிஷ்கரிப்பு

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தினர் நேற்றைய தினம் மீண்டும் வேலைப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.முன்னாள் யாழ். பல்கலைக்கழகப்பதிவாளரை மீண்டும்வேலைக்கு சேர்த்துக்கொள்ளவென பல்கலைக்கழகப்பேரவை முடிவெடுத்தமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தே வேலைப் பகிஷகரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.நேற்றைய தினம் பல்கலைக்கழகத்தின் வாசலில் பல் வேறு சுலோகங்களையும் தாங்கிய அட்டைகள் தொங்கவிடப்பட்டு இருந்தன. ஆயினும் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான விரிவுரைகள் இடம்பெற்றன.துணைவேந்தர் மூத்த பேராசிரியர்களுடன் கலந்துரையாட பின்நிற்பதனாலேயே இப் பிரச்சினை தொடர்ந்து செல்வதாக ஊழியர் தொழிற்சங்கப்பிரதிநிதியொருவர் கருத்துத்தெரிவித்தார் (41)

வவுனியா மாவட்டத்தில்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் சந்திப்பு

(செட்டிகுளம்)

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வவுனியா மாவட்டத்திற்கு புதிதாக நியமனம் பெற்ற வதிவிடப் பிரதிநிதி, வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் எஸ்.டி.மூர்த்தியுடன் கடந்த வியாழன் உத்தியோகபூர்வ சந்திப்பொன்றை நடாத்தினார்.**

இச் சந்திப்பில் வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடைமுறைப்படுத்திவரும் திட்டங்கள், சமூக நல்லிணக்கச் செயற்பாடுகள், வவுனியா மாவட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகள் இது வரை மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் அடைவுகள் மற்றும் அதன் மூலம் மக்களுக்கு கிடைத்த பயன்பாடுகளைப் பற்றி கலந்துரையாடியதுடன், அவை தொடர்பான விளக்கங்களையும் கேட்டறிந்தார்.

உத்தியோக பூர்வமாக நடைபெற்ற இச்சந்திப்பில் தேவையான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தம்மால் இயன்ற வரை உதவிகளைச் செய்வதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி உறுதியளித்ததுடன் பரஸ்பர ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் உறுதியளித்தார். (21)



புதுக்குடியிருப்பு நகரப் பகுதியின் வடிகால் வெட்டும் வேலைகள் இடம்பெற்று வருகின்றது. வடிகால்களை வெட்டும் வேலையில் கனரக வாகனம் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு- க.தவரட்ணம்)

## கரைதுறைப்பற்று கோட்ட மட்ட பெருவிளையாட்டு முடிவுகள்

கரைதுறைப்பற்று கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி சிறப்புற நடைபெற்றுள்ளது..

முதல் நிகழ்வாக கடந்த12ஆம் திகதி 15 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான சதுரங்க போட்டியில் செம்மலை மகாவித்தியாலயம் முதலாமிடமாகவும், உடுப்புக்குளம் தமிழ் மகாவித்தியாலயம் இரண்டாமிடமாகவும். 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் கொக்கிளாய் அ.த.க பாடசாலை முதலாமிடமாகவும், செம்மலை மகாவித்தியாலயம் இரண்டாமிடமாகவும், 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி முதலாமிடமாகவும், கொக்கிளாய் அ.த.க பாடசாலை இரண்டாமிடமாகவும், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி முதலாமிடமாகவும், கொக்கிளாய் அ.த.க. பாடசாலை இரண்டாமிடமாகவும் தெரிவானது.கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கொக்கிளாய் அ.த.க பாடசாலை முதலாமிடமாகவும், முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் இரண்டாமிடமாகவும், 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் வற்றாப்பளை மகாவித்தியாலயம் முதலாம் இடமாகவும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி இரண்டாம் இடமாகவும் தெரிவானது. அடுத்து நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் கொக் கிளாய் அ.த.க. பாடசாலை முதலாமிடமாகவும் வற்றாப்பளை மகாவித்தியாலயம் இரண்டாமிடமாகவும், 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கொக்கிளாய் அ.த.க பாடசாலை முதலாம் இட மாகவும், செம்மலை மகா வித்தியாலயம் இரண்டாம் இடமாகவும், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கொக்கிளாய் அ.த.க பாடசாலை முதலாம் இடமாகவும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி இரண்டாம் இடமாகவும், தெரிவானதையடுத்து. கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் முதலாம் இடமாகவும், குமுழமுனை மகா வித்தியாலயம் இரண்டாம் இடமாகவும் தெரிவானதையடுத்து, 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான எல்லே போட்டியில் கொக்கிளாய் அ..த.க பாடசாலை முதலாம் இடமாகவும், வற்றாப்பளை மகாவித்தியாலயம் இரண்டாம் இடமாகவும் தெரிவாகியது.

கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் கொக்கிளாய் அ.த.க. பாடசாலை முதலாம் இடமாகவும், முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் இரண்டாம் இடமாகவும், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் முதலாம் இடமாகவும், கொக்கிளாய் அ.த.க. பாடசாலை இரண்டாம் இடமாகவும், 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் செம்மலை மகாவித்தியாலயம் முதலாம் இடமாகவும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி இரண்டாம் இடமாகவும் தெரிவாகியது.

மேற்படி போட்டி நிகழ்வுகள் முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும், வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டு மைதானத்திலும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## வவுனியா கோட்ட மட்ட பெருவிளையாட்டு முடிவுகள்

வவுனியாவில் நடத்தப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான கோட்ட மட்ட பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள் வருமாறு;

எல்லே (ஆண்) முதலாமிடம் சீ.சீ.ரி.எம் பாடசாலை, இரண்டாம் இடம் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், எல்லே(பெண்) முதலாமிடம் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், கபடி (ஆண்) முதலாமிடம் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம், கபடி (பெண்) முதலாமிடம் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் தாண்டிக் குளம் பிறமண்டு வித்தியாலயம், கிரிக்கெட் (ஆண்) முதலாமிடம் வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம், உதைபந்து (17 வயதின் கீழ் ஆண்கள்) முதலாமிடம் பண்டாரிக் குளம் விபுலானந்தாக்கல்லூரி, இரண்டாம் இடம் சீ.சீ.ரி.எம் பாடசாலை, உதைபந்து (19 வயதின் கீழ் ஆண்கள்) முதலாமிடம் வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலயம், இரண்டாம் இடம் பூவரசங் குளம் மகாவித்தியாலயம், கரப்பந்து (15 வயதின் கீழ் ஆண்கள்) முதலாமிடம் வெளிக்குளம் கனிஷ்ரஉயர்தர வித்தியாலயம், இரண்டாம் இடம் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், கரப்பந்து (17 வயதின் கீழ் ஆண்கள்) முதலாமிடம் வெளிக் குளம் கனிஷ்ர உயர்தர வித்தியாலயம், இரண்டாம் இடம் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், கரப்பந்து (19வயதின் கீழ் ஆண்) முதலாமிடம் வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலயம், இரண்டாம் இடம் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம், கரப்பந்து (15 வயதின் கீழ் பெண்) முதலாமிடம் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம், கரப்பந்து (17 வயதின் கீழ் பெண்) முதலாமிடம் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், கரப்பந்து (19வயதின்கீழ் பெண்) முதலாமிடம் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வலைப்பந்து (15 வயதின் கீழ் பெண்)முதலாமிடம் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம். இரண்டாம் இடம் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வலைப் பந்து (17 வயதின் கீழ் பெண்) முதலாமிடம் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் இறம் பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வலைப்பந்து (19 வயதின் கீழ் பெண்) முதலாமிடம் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, அணிநடை (ஆண்) முதலாமிடம் பெரிய கோமரசங்குளம் மகாவித்தியாலயமும், வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன., மூன்றாம் இடம் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்,

அணிநடை (பெண்) முதலாமிடம் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும், இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன, மூன்றாம் இடம் அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம், அணிநடை (ஆண்), பெண் இரண்டிலும் முதலாமிடத்தை இரு பாடசாலைகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

## பக்தர்களின் நலன் கருதி தொண்டு அமைப்புக்கள் உதவி

கடந்த வெள்ளிக்கிழமை புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு வருகை தந்த மக்களின் நலன் கருதி பல தொண்டர் அமைப்புக்கள் உதவி புரிந்துள்ளன.

இதனடிப்படையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளி. மாவட்ட கிளைத் தலைவர் கார்த்திகேசு செயலாளர் க.கணேஷ் ,பொருளாளர் தி.அபராயிதன் ஆகியோரும் மற்றும் நிர்வாகத்தினரும் பிரிவு செஞ்சிலுவைச் சங்கம் அலகு செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் உறுப்பினர்கள் ஆகியோரும் மேலும் இந் நிகழ்வில் பங்கு கொண்ட புன்னை நீராவி மற்றும் தருமபுரம் பாடசாலை மாணவர்கள் 30 இற்கும் மேற்பட்டோரும தொண்டர்களும் இணைந்து மக்களுக்குரிய இச் சேவையினை வழங்கியுள்ளனர். (46)

## இலங்கை வங்கியின் புதிய கட்டடம் பள்ளி முனையில் திறப்பு

(மன்னார்)

மன்னாரில் இலங்கை வங்கியின் புதிய கட்டடம் பள்ளிமுனையில் திறந்து வைக்கப்பட்டது.

பள்ளி முனை வீதியில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு இக் கட்டடத்தினை வடபிராந்திய பொது முகாமையாளர் ஏ.சி.பெனாண்டோ அவர்கள் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் வடபிராந்திய பொது முகாமையாளர் பாலசுப்பிரமணியம், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மன்னார் ஆயர் இராயப்யோசப் ஆண்டகை மற்றும் அரசசார்பற்ற பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(18)

## மாதாந்த கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட அன்னையர் முன்னணியின் மாதாந்த கலந்துரையாடல் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு முல்லை மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது என முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேளினி தெரிவித்துள்ளார்.

இதில் முல்லை மாவட்ட அன்னையர் முன்னணியின் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (20)

## நிர்வாகத் தெரிவு

ஞானிமடம் கமக்கார அமைப்பு புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 23ஆம் திகதி ஞானிமடத்தில் தலைவர் இரா. செல்வராசா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அப்பகுதி கிராம சேவகர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (34)

## நுளம்புக் குடம்பிகளை அழிக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு மற்றும் மலேரியா காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் பற்றிய ஆய்வு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் பொன்நகர், விவேகானந்தநகர் அறிவியல் நகர் கிராமங்களின் மலேரியா நுளம்புகளின் குடம்பிகள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து அவற்றை அழிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிளிநொச்சி பூச்சியியல் ஆய்வாளர்கள் பொன்மயில் இராசதுரை தெரிவித்துள்ளார். (46)

## தொண்டர் ஆசிரியர் சந்திப்பு

(பூநகரி)

கடந்த 25 ஆம் திகதி பூநகரி தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் வை.சுதாகரன் தலைமையில் தொண்டர் ஆசிரியருக்கான சந்திப்பு இடம் பெற்றது. இச்சந்திப்பில் வழங்கப்படவிருக்கும் நியமனம் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இக்கஷ்ரப்பிரதேசத்தில் எதுவித ஊதியம் இல்லாமல் பலர் தொண்டர்களாகச் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (34)

# காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு இல்லையேல் கார்கில் போர் போன்ற போர் மீண்டும் வெடிக்கும்

## பாக். அதிபர் முஷாரப்



(இஸ்லாமபாத்)

**காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் கார்கில் போர் போன்ற போர் மீண்டும் வெடிக்கும் என்று இந்தியாவுக்கு பாகிஸ்தான் அதிபர் முஷராப் மிரட்டல் விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தியாவும், பாகிஸ்தானும் மீண்டும் இணைய வாய்ப்பு இல்லை என்றே கருதுகின்றேன். பாகிஸ்தான் ஏன் உருவாக்கப்பட்டது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய துணைக் கண்டத்திலுள்ள முஸ்லிம்கள் தங்களுக்கு தனித்தாய் நாடு வேண்டும் என்று கேட்டதால் பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது. அப்படி உருக்கப்பட்டதை மீண்டும் இந்தியாவுடன் இணைக்க முடியாது. ஆனாலும் எதிர்காலத்தில் இரு நாடுகள் இடையே நல்லுறவு நிலவ வர்த்தகம், பொருளாதாரம் போன்றவற்றில் ஒத்துழைப்பு, நல்லெண்ணத்தை ஏற்படுத்தலாம்

அப்படிப்பட்ட நல்லுறவு உருவாக மையப்பிரச்சினையான காஷ்மீர் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காண வேண்டும். காஷ்மீர் பிரச்சினையை நாம் கம்பளத்துக்கு அடியில் போட்டு மறைத்துவிட முடியாது. அதற்கு தீர்வு கண்டே ஆகவேண்டும்.

மோதல்கள் நடந்த காலம் எல்லாம் முடிந்துவிட்டது. இனி காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகண்டு மற்றப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதன் மூலம்தான் இரு நாடுகளும் ஒன்றை ஒன்று நெருங்கி வரமுடியும். கார்கில் போர் பற்றிபேச நான் வெட்கப்படவில்லை. அதில் யார் ஜெயித்தார்,. யார் தோற்றார் என்ற விவாதத்தில் ஈடுபட நான் விரும்பவில்லை. தோல்வியை இந்திய மக்களும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பாகிஸ்தான் மக்களும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். எனவே அது பற்றி விவாதிப்பதை நிறுத்திக்கொள்ளலாம்.

கார்கில் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கையை இந்தியா குறைத்துக் கூறி இருக்கிறது. உண்மையில் இறந்தவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகம். கார்கில் போரின்போது இந்தியாவுக்கு ஏற்பட்ட பல பிரச்சினைகள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. கார்கில் போரை இரு நாடுகளும் முழுமையாகப் பார்க்கவேண்டும். காஷ்மீர் பிரச்சினை அடிப்படையில் கார்கில் போரை முழுப்பரிமாணத்தில் இந்தியா பார்க்க வேண்டும். சிம்லா உடன்பாட்டுக்குப் பிறகு எல்லையில் பலமுறை இந்தியப் படையினர் ஊடுருவியதால்தான் கார்கில் போர் மூண்டது. இந்தியா-பாகிஸ்தான் இடையே மூன்று போர்கள் நடந்திருக்கின்றன. நாம் நம்பிக்கையுடன் ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வேண்டும். யார் தோற்றார்கள், யார் வெற்றி பெற்றார்கள் என்பது பற்றி விவாதம் நடத்தக் கூடாது. எதிர்காலம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

காஷ்மீர் பிரச்சினைக்குத்தீர்வுகாண வேண்டும். அப்படி தீர்வு கண்டால் சியாச்சின், கார்கில் போன்ற போர்கள் மீண்டும் மூளாது. தீர்வு காணத் தவறினால் மீண்டும் போர் மூளுவதைத் தடுக்க முடியாது என்றார் முஷாரப்.

# அணுத் தொழில்நுட்பத்தை திருடினார் பாக்.வர்த்தகருக்கு அமெரிக்கா தடை


(வோஷிங்டன்)

அமெரிக்காவிலிருந்து அணு ஆயுதம் தயாரிப்பு தொடர்பான உயர் தொழில் நுட்பத்தையும் சில கருவிகளையும் கடத்தியதாகக் கூறப்படும் ஹுமாயூன் கான் என்ற பாகிஸ்தானிய வர்த்தகருக்கு இனி எதையும் விற்கக்கூடாது என்று அமெரிக்க வர்த்தகத்துறை தடை விதித்துள்ளது. அவருடைய பெயரை கறுப்புப் பட்டியலில் சேர்க்குமாறும் அது அறிவுறுத்தியிருக்கிறது.

தென்னாபிரிக்காவில் வசிக்கும் ஆஷர் கர்னி என்ற இஸ்ரேலியரை டென்வர் நகரில் கடந்த ஆண்டு பொலிசார் கைது செய்தனர். அவருடைய நடவடிக்கைகள் குறித்து விசாரித்த போது அணு ஆயுதம் தயாரிப்பது தொடர்பான தொழில் நுட்பங்களும் தயாரிப்பில் பயன்படும் கருவிகளும் அமெரிக்காவிலிருந்து தென்னாபிரிக்கா வழியாக பாகிஸ்தானுக்குக் கடத்தப்பட்டது தெரிய வந்துள்ளது.



ஈராக் மொசுலில் சியாட் முஸ்லிம் கட்சி உறுப்பினர் மூன்று பேர் உட்பட 16 பேர் பலியாகக் காரணமான குண்டு வெடிப்பில் சிக்கிய வாகனம் எரிகிறது.



உயிர்த்த ஞாயிறு தினத்தைக் குறிக்கும் முகமாக வத்திக்கானில் சென் பீற்றர் தேவாலயத்தில் குழுமியிருந்த யாத்திரிகர்கள். (இம்முறை பரப்பரசர் ஜோன்போல் ஆசியுரை வழங்க முடியாது போனமை குறிப்பிடத்தக்கது)

# சூடான் அரசைக் கவிழ்க்க சதி 72 பேருக்கு மரண தண்டனை?

(ஹார்டோன்)

சூடான் அரசை கவிழ்க்க சதி செய்த 72 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது. சூடானில் அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகக் கடந்த செப்ரெம்பர் மாதம் எதிர்கட்சித் தலைவர் துராபியை அந் நாட்டு பொலிசார் கைதுசெய்து சிறையிலடைத்தனர்.

அவரோடு சேர்த்து 72 பேரும் கைது செய்யப்பட்டனர். இந்த 72 பேர் மீதும் வரும் 20ஆம் திகதி முதல் முறைப்படி விசாரணை தொடங்குகின்றது. இந் நிலையில் இந்த வழக்குக் குறித்து சூடான் அரசின் அட்டர்னி ஜெனரல் முகமது பாரித் நேற்று முன்தினம் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில்; குற்றம் சாட்டப்பட்ட 72 பேரும் தங்களது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். சூடான் சட்ட விதிகளின் படி அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. எனினும் இது விடயத்தில் நீதிமன்று தான் முடிவு செய்ய வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் துராபி மீது இன்னமும் வழக்கு விசாரணை தொடங்கவில்லை என்று கூறினார்.

# ஆலயக் கோபுரத்தில் ஏறி மன நோயாளி போராட்டம்

(வத்திக்கான்)

வத்திக்கானில் ஆலய கோபுரத்தில் ஏறி மனநோயாளி திடீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இத்தாலி நாட்டின் தலைநகரமான ரோம் நகரின் ஒரு பகுதியில் போப்பாண்டவர் வசிக்கும் வத்திக்கான் பகுதியுள்ளது. இங்குள்ள புனித பீட்டர் ஆலய கோபுரத்தின் மீது நேற்று ஒரு மனநோயாளி திடீரென ஏறினார். கோபுர உச்சியில் இருந்தபடி அவர் ஆர்ப்பாட்டம் செய்தார். உலகம் முழுவதுமுள்ள அனாதைகளை காப்பாற்ற போப் ஒரு லொத்தர்சீட்டு பரிசுத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த நபர் கோரிக்கை விடுத்தார். அவரைப் பத்திரமாகப் இறக்க தீயணைப்புப் படையினர் முயன்றனர். ஆலயத்தின் உட்புறமாக உள்ள படிக்கட்டு வழியாக கோபுர உச்சிக்கு ஏறி அவரைப் பிடிக்க முயன்றார்கள். முடியவில்லை பலமுறை வற்புறுத்தியும் அந்த 46 வயது மனிதர் கீழ் இறங்கி வர மறுத்தாராயினும் பின்னர் ஒருவாறு கீழே இறக்கி விட்டனர்.

# ஈஸ்டர் திருநாளையொட்டி சைகையால் ஆசி வழங்கிய போப்

ஈஸ்டர் திருநாளையொட்டி வத்திக்கான் நகரில் புனித பீட்டர் சதுக்கத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு போப்பாண்டவர் இரண்டாவது ஜான் பால் சைகையாலேயே ஆசி வழங்கினார்.

யன்னலோரத்தில் வந்து நின்ற போப்பாண்டவரைப் பார்த்ததும் ஏராளமான பக்தர்கள் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்ந்தனர். பலர் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். சிலர் உணர்ச்சி மேலிடக் கண்ணீர் விட்டனர். அவர்களைப் பார்த்து முதலில் சிலுவைக் குறியிட்டார். உடனே தேவாலய உதவியாளர்கள் ஒலி பெருக்கியை அவரின் அருகில் கொண்டு வந்தனர். அவரும் முதலில் பேசுவதற்குத் தயாரானார். பிறகு முடியாததால் மீண்டும் சிலுவைக் குறியிட்டு ஆசி வழங்கினார். பிறகு கர்தினால் ஏஞ்செலோ சோடனோ போப்பாண்டவரின் ஆசியுரையை வாசித்தார். யன்னலோரம் நின்றபடியே அந்த வாசகங்களைக் கவனித்தார் போப்பாண்டவர்.

## ஈராக்கில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி; பலர் படுகாயம்

ஈராக்கில் சம்பள உயர்வு கேட்டு போராட்டம் நடத்திய பாதுகாப்பு பணியாளர்கள் மீது அமைச்சரின் பாதுகாவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் பலியானதுடன் பலருக்குப் படுகாயம் ஏற்பட்டது. இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக்கில் எஸ்.ரி.எப் எனப்படும் பாதுகாப்பு பணியாளர்கள் தங்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுவதுடன் அதிக வரிவிதிப்பு இருப்பதாக புகார் தெரிவித்துள்ளனர்.

இதற்குக் கண்டனம் தெரிவித்து நூற்றுக்கணக்கான பணியாளர்கள் தலைநகர் பாக்தாத்திலுள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சக கட்டடம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தின் போது அவர்கள் அமைச்சருக்கு எதிராக கோசங்களை எழுப்பினர். அப்போது அமைச்சரின் பாதுகாவலர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியோரை நோக்கி துப்பாக்கித் தாக்குதலை நடத்தினர். அமைச்சரின் உத்தரவின் பேரிலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடந்ததாக ஆர்ப்பாட்டம் நடத்தியோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நிராயுதபாணிகளான மூன்று படையினரைக் கடத்திச் சென்று கொலை செய்த மாவோயிட் கிளர்ச்சிவாதிகள்.



வத்திக்கான் நகரில் சனிக்கிழமை நடைபெற்ற ஈஸ்டர் நிகழ்ச்சியில் மெழுகுவர்த்தியை ஏந்தி நிற்கும் ஜேர்மனியைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் ராட்ஜிங்கர் ஒரு மணி நேரத்திற்குள் மேலாக நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடர்ந்து நிற்க முடியாது என்பதால் போர்ப்பாண்டவர்ஜான் பாலுக்குப் பதிலாக நின்றார்.



# அமெரிக்காவின் பார்வையில்.... நரேந்திரமோடியும் மதக்கலவரமும்

**இந்திய அரசியலில் இன்று சர்ச்சைக்** குரிய மனிதராக முத்திரை குத்தப்பட்டி ருப்பவர் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடிதான்!. இத்தகைய சர்ச்சைக்குரிய மனிதராக அவர் சித்திரிக்கப்படுவதற்கு பிரதான காரணமாகியிருப்பது குஜராத்தில் ஏற்பட்ட மதக்கலவரமேயாகும்.



நரேந்திரமோடி

சான்றாக அமைகின்றது.

இதேபோன்று அமெரிக்காவில் பல அமைப்புக்களும் கூட நரேந்திரமோடியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பதாக தெரிய வந்துள்ளது.

இதனையே தான் இங்கிலாந்தும், எதிரொலித்திருக்கின்றது. அதாவது இங்கிலாந்துக்கு வருகை தரும் குஜராத் முதலமைச்சர் அங்கு வைத்தே கைது செய்யப்படுவார் என்றே எச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது குஜராத் கலவரத்தின் போது இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர்களான இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களது தந்தை இங்கிலாந்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளதாக அறிவிப்புச் செய்துள்ளார். எனவே வழக்குத் தொடரப்படும் சந்தர்ப் பத்தில், நரேந்திரமோடி இங்கி லாந்தினுள் கால் வைப்பா

அமெரிக்கா குஜராத் அமைதியாக இருக்கும் போது மட்டும் ஏன் விசாவை மறுக்கின்றது.... என்றும் வினா எழுப்பியிருக்கின்றது....?


உண்மையில் குஜராத் மாநிலம் கலவரங்களை கண்டிருக்கின்றதா... அமெரிக்கா இப்போது ஏன் நரேந்திர மோடிக்கு விசாமறுப்பு செய்திருக்கின்றது...? என்பதற்கு 2002 இற்கு முன்னரான குஜராத் நிலைமையினை நோக்கி நகர்ந்தால்...

குஜராத் கலவரங்கள் என்றதும் உடன் எவருக்கம் ஞாபகத்தில் நிழலாடுவது கோத்ரா ரயில் எரிப்பு, சிலுவைப்போர் போன்ற சம்பவங்கள் தான்!.

கோத்ரா ரயில் எரிக்கப்பட்டதையடுத்து இந்து-முஸ்லிம் கலவரங்கள் குஜராத்தில் பரவலாக வெடித்துச் சிதறியது. உயிரோடு வெட்டப்பட்டவர்கள், நித்திரையில் கொழுத்தப்பட்டவர்கள், ஏன்...கர்ப்பிணி பெண்ணின் வயிறு கிழித்து வெளியே எடுக்கப்பட்ட சிசு கொழுத்தப்பட்டமை போன்ற கொடூரமான சம்பவங்கள் குஜராத்தை ரத்தச் சகதியினால் நனைத்திருக்

உயிரோடு கொழுத்தப்பட்ட பாதிரியார் அமெரிக்க வாசியோ என்றே இன்று சந்தேகம் எழுந்துள்ளது....? அது மட்டுமன்றி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாதிரியாரின் மனைவியும், மகளும் அமெரிக்காவிற்குச் சென்றுவிட்டனர். மகளின் பட்டப்படிப்பு காரணம் காட்டியே இருவரும் அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குஜராத் கலவரத்தின் பின்னர் அமெரிக்கா இரண்டு தடவை



புஸ்

நரேந்திர மோடிக்கு விசா வழங்கியிருக்கின்றதே.... என்றால்.. கொழுத்தப்பட்ட கிறிஸ்தவர் பாதிரியார் அமெரிக்க வாசியாக இருக்கும் பட்சத்தில்... அவரது குடும்பத்தின் நன்மை கருதியும் அவர்களுக்கு ஏதாவது தீமை ஏற்படும் எனும் காரணமாகவே தான் அமெரிக்கா நரேந்திரமோடிக்கு இரண்டு தடவை விசா வழங்கியதா...?

தற்போது பாதிரியார் குடும்பம் அமெரிக் காவினுள் பிரவேசித்து விட்டதையடுத்தே, நரேந்திரமோடியை அமெரிக்காவினுள் கால் பதிக்க அமெரிக்கா தடை விதித்துள்ளதோ... எனும் வினா எழாமல் இல்லை...

இதேவேளை தீவிரவாத பட்டியலில் நரேந்திரமோடியையும், அமெரிக்கா சேர்த்துக கொள்ளும்... எனும் சந்தேகமும் இல்லாம லில்லை.

அதுமட்டுமன்றி ரதயாத்திரை நடத்தி பாபர் மசூதியை மண் மேடாக்கிய அத்வானி உள்ளிட்டவர்களுக்கு அமெரிக்கா எத்தகைய நடவடிக்கைகளை இனி மேற்கொள்ளும்.. எனும் மற்றொரு சந்தேகமும் இல்லாம

**அ.கலைவாணி**

லில்லை.

இது ஒருபுறம் இருக்க, நரேந்திரமோடி ஆதரவாளர் டில்லி அமெரிக்க தூதரகம் மீதும், பெப்சி நிறுவனம் மீதும் தமது

அதாவது குஜராத்தில் மத சுதந்திரம் மீறப் பட்டுள்ளதாகவும், அதற்கு நரேந்திரமோடியே பிரதானமானவர் என்றுமே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இத்தகைய குற்றச் சாட்டை முன்னெடுத்திருப்பது வேறு யாருமல்ல அமெரிக்காதான்!.

அமெரிக்காவின் குற்றச்சாட்டினை இங்கிலாந்தும், பின்பற்றிவிட்டது என்று தான் கூறவேண்டும். அதாவது இங்கிலாந்திற்கு வருகை தரும் நரேந்திரமோடி எந்தவேளை யும் இங்கிலாந்துப் பொலிசாரினால் கைது செய்யப்படுவார் என்பதை இங்கிலாந்து அரசு அறிவித்திருக்கின்றது என்றே நம்பும்படியான சம்பவங்கள் நடந்திருப்பதை அவதானிக்க முடியும்.

நரேந்திரமோடி அமெரிக்கா செல்வதற் கான விசா அனுமதியினை அந்நாடு மறுத்திருக்கின்றது. இத்தகைய விசா மறுப்பு குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி தலையை தொங்கப்போடும் அவலத்திற்கு தள்ளிவிட்டிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை.


அந்நேரம் பாரதிய ஜனதாக் கூட்ட ணிக்கும், நரேந்திரமோடி விவகாரம் மீண்டும், மீண்டும் தலைவலியினை ஏற்படுத்திக் கொண்டே இருப்பதாகவே அபிப்பிராயம் மறுபடியும் எழுந்திருக்கின்றது.

ஏனெனில், குஜராத் மதக்கலவரமும், கடந்த மக்களவைத் தேர்தலில் பாதகமான- தோல்விக்கு வழிவகுத்து விட்டதாகவேதான் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஏற்கனவே குற்றஞ் சுமத்தியிருந்தமை தெரிந்த விடயமே. இதனை மதவாதிகளான ஏனைய பாரதிய ஜனதாக் கட்சியினர் மறுப்புத் தெரிவித்தமையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் வேறுவிடயம்.

2002 பெப்ரவரி தொடக்கம் மே வரையான காலப்பகுதியிலேயே அதிகமான மதக்கலவரங்கள் வெடித்திருக்கின்றன மக்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றனர் இத்தகைய காலப்பகுதியில் குஜராத்தின் முதலமைச்சராக நரேந்திரமோடி பதவியிலி ருந்தவர் எனவே மதசுதந்திரம் மீறப்படுவதை நரேந்திரமோடி பார்த்துக்கொண்டிருந் திருக்கின்றார் என்பதே அமெரிக்காவின் குற்றச்சாட்டாகும்.

மதசுதந்திரம் மீறப்பட்டதை பார்த்துக் கொண்டிருந்தமையினால் "212ஏ" சட்ட விதிப்படி அமெரிக்காவுக்கு நரேந்திரமோடி அரசு முறை பயணமோ ஏன்... சுற்றுலாப் பயணமோ கூட மேற்கொள்ளப்படுவதைத் தடுக்க முடியும் என்பதே அமெரிக்காவினது வாதமாகவுள்ளது.

நரேந்திரமோடி விவகாரத்தில் அமெரிக்கா மிகவும் இறுக்கமாகவே செயற் படுகின்றது என்றே தான் கூறவேண்டியுள் ளது. ஏனெனில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், நரேந்திரமோடியின் விசாமறுப்பை பரிசீலிக்குமாறு கேட்டுக் கொண்ட போது கூட, அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ் மறுத்தது மறுத்தது தான் என்று கூறியுள்ளார் என்பதே அதற்குச்




ரானால் மறுநிமிடம் கைது செய்யப்படுவது உறுதி என்று இங்கிலாந்து எச்சரித்ததை யடுத்தே குஜராத் முதலமைச்சர் தனது பயணத்தை அவசர அவசரமாக ரத்துச்செய் துள்ளார் என்பது வெளிப்படை.

1998 இல் சிலி சர்வதிகாரி லண்டன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றபோது லண்டன் நீதிமன்றம் அவரைக் கைது செய்தமை குறிப்பிடத்தக்கதொன்று.

உண்மையில் மதக்கலவரங்களின் மறுவடிவம் தான் குஜராத் மாநிலம்! இங்கு மத சுதந்திரம் மீறப்படும் போது பறிக்கப் படும் போதெல்லாம் தான் மக்கள் உயிர் களை விலை கொடுத்திருக்கின்றார்கள். நாட்கள் வாரங்களாக, வாரங்கள் மாதங் களாக இங்கு மட்டும் தான் கலவரங்களின் உச்சம் தெறித்திருக்கின்றது.

இவையனைத்தும் நடந்து முடிந்து விட்ட விடயமாக இந்திய அரசியலைப் பொறுத் தவரை இருந்து வந்துள்ளது. ஆனால் இன்றைய நிலையில் பழைய குப்பைகள் என்று புதைக்கப்பட்ட அனைத்துமே தோண்டி எடுக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப் படுவது போன்று தான் நிலைமைகள் படம் பிடித்துக்காட்டுகின்றன எனலாம்.

இல்லையேல் அமெரிக்கா நரேந்திர மோடிக்கு விசாமறுப்பு செய்திருக்க மாட் டாது. இங்கிலாந்தோ தமது நாட்டில் கால் வைத்தவுடன் கைது செய்யும் உத்தரவை பிறப்பிக்கவுள்ளதாக எச்சரிக்கும் அவலம் உருவாகியிருக்க மாட்டாது.

இதனையெல்லாம் பாரதிய ஜனதாக் கூட்டணி ஏற்கத் தயாரில்லை. குஜராத் கலவரத்தின் பின்னர் இரண்டு தடவை நரேந்திரமோடி அமெரிக்கா சென்றுள் ளாரே...? என்று தான் அக்கூட்டணி வாதம் புரிய ஆரம்பித்திருக்கின்றது. அது மட்டுமன்றி அப்போது விசாவை மறுக்காத

கின்றன.

இத்தகைய சம்பவங்களின் போது முதலமைச்சராகப் பதவி வகித்த நரேந்திர மோடி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. மதவாத வகுப்பு கலவரமே என்று மட்டுமே அவர் முத்திரை குத்தியதுடன் நின்றுவிட்டார். இதனால் கோத்ரா ரயில் எரிப்பால் மட்டுமே 700 இற்கும் மேற்பட்ட இந்து- முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை உலகறிந்ததொன்று.

இதுவரை கோத்ரா ரயில் எரிப்பின் பிரதான சூத்திரதாரி யார் என்று குஜராத் அரசு கண்டுபிடிக்கவே இல்லை. கைது செய்யப்பட்டவர்கள் மட்டும் ஏராளம். குற்றவாளிகளை மட்டும் குஜராத் அரசு வெளிப்படுத்த வில்லை என்பதே உண்மை.

இதேபோல் "சிலுவைப் போர்" என்பதையும், குஜராத் மாநிலம் தான் அனுபவித்திருக்கின்றது. 1998 இல் கிறிஸ்தவர்களுக்கெதிரான கலவரங்கள் உருவானது இதன் போது தான்!.

கிறிஸ்தவ பாதிரியாரின் குடும் பம் உயிரோடு கொழுத்தப்பட்ட கொடூரத் தையும், குஜராத் மாநிலம் தான்கண்டிருக் கின்றது. இச்சம்பவத்தில் கிறிஸ்தவ பாதிரியாரும், இரண்டு மகன்களும் உயிரிழந்தனர். தாயும், மகளும் உயிர் தப்பினர்.

இதனையடுத்து குஜராத் மாநிலத்தில் தேவாலயங்கள் தாக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். இந்துக்கள் மீது கிறிஸ்தவர்கள் தாக்குதலை நடத்தினர். இந்து கிறிஸ்தவ மோதல் கலவரமாக மாறியது. அது சிலுவைப் போராக பெயர் பெற்றது.



அத்வானி வாஜ்பாய்

வெறுப்பைக் காட்டியுள்ளனர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

இத்தகைய சம்பவங்களினால் நரேந்திர மோடி அமெரிக்க-இந்திய இராஜீக உறவுகளைக்கூடப் பாதிப்புறச் செய்தல் கூடும்.

எது எப்படியோ... குஜராத் மாநிலத்தைப் பொறுத்தவரை மதம் என்பது விஷமாகி உயிர்களைப் பலி கொண்டமையினை எத்த கைய சமாதானம் மூலமும் குஜராத் முதல மைச்சரால் ஈடுகட்டி விட முடியாது என்பதே மிகப்பெரிய உண்மையாகும் என்றால் மிகை யில்லை.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# சிறப்பான எதிர்காலம்

**தெற்காசிய** அணிகளான இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மேற்கத்தைய அணிகளுக்கு சவாலான அணிகளாகத் திகழ்வதற்கும் தமக்கிடையிலான போட்டியில் செல்வாக்குச் செலுத்துவதற்கும் துடுப்பாட்டத்தைவிட



பந்து வீச்சே முக்கியமானதாக அமைகின்றது.

இதில் இரு பிராந்திய அணிகளுக்குமிடையில் வித்தியாசம் என்னவென்றால் தெற்காசிய அணிகள் சுழற்பந்து வீச்சை நம்பிக்கையாகக் கொண்டுள்ளமைதான்.

குறிப்பாக இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன், இந்தியாவின் அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், பாகிஸ்தானின் டேனிஷ் கனேரியா போன்றவர்கள் இவ் அணிகளுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக திகழ்கின்றனர்.

இதில் பாகிஸ்தானின் டேனிஷ் கனேரியா குறிப்பிடத்தக்கவர். சக்லென் முஷ்டாக்கிற்குப் பின்னர் பாக். அணியில் இடம்பிடித்த மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்.



இதுவரை 26 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கனேரியா பத்துத் தடவைகள் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளமை அவரின் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தியுள்ளது.

தற்போது இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் சுற்றுலா கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தானின் முன்னணி வேகப் பந்துவீச்சாளர்கள் இல்லாத நிலையில் கனேரியா அணிக்குப் பெரும் பங்காற்றி வருகிறார்.

இந்தியாவின் கும்ளே, அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் போன்றவர்களுக்கு இணையாக இல்லாதபோதும், கனேரியாவின் பந்து வீச்சு எதிர்காலத்தில் எதிரணிகளுக்கு பெரும் சவாலாக இருக்குமென துணிந்து கூறலாம்.

ஆரம்பத்தில் டெஸ்ட் போட்டிகளிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்ட கனேரியா எதிர்காலத்தில் ஒரு நாள் போட்டிகளிலும் சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பு பிரகாசமானதாகவே உள்ளது.

ஏனெனில், உலகில் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களைப் போன்று செயற்பட்டு வருவது கனேரியாவுக்கு சிறப்பான எதிர்காலமே.

# நம்பிக்கை வீரர் ஒரு சிலரே



**கிரிக்கெட்டில்** பந்து வீச்சு துடுப்பாட்டம் போன்றவற்றில் ஒவ்வொரு அணியிலும் நட்சத்திர வீரர்கள் இருப்பார்கள் ஆனாலும் அணிக்கு கைகொடுக்கும் நம் பிக்கை வீரர்கள் ஒரு சிலரே.



இவர்களில் இந்தியாவின் ராகுல் ராவிட் குறிப்பிடத்தக்கவர். சொந்த மண்ணிலும் அன்னிய மண்ணிலும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தும் இவர் அவ் அணியின் தடுப்புச் சுவராக விளங்குகின்றார்.

ஆரம்ப விக்கெட்டுக்கள் வேகமாக வீழ்ந்து ஆடுகளம் பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கின்றபோதும் நிதானமாக நின்று ஓட்டங்களைக் குவிப்பார்.

இது எதிரணிக்குச் சவாலாக அமை வதுடன் அவரை களத்திலிருந்து அகற்றாத வரை இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கையை தடுத்து நிறுத்துவது என்பது எதிரணிக்கு பெரும்பாடு.

உதாரணமாக பாகிஸ்தானுக்கு எதிரான கொல்கத்தா டெஸ்டில் இரு இனிங்சிலும் சதமடித்த ராவிட் இந்தியாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார். இதுவே பாகிஸ்தானின் வெற்றி இலக்கை கடினமாக்கியது என்றால் மிகையில்லை.

1996ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுக மான ராவிட் அன்று முதல் உறுதி மிக்க ஆட்டத்தை வெளிப்படுத்துவதில் கில்லாடி. இதனால், குறுகிய காலத்தில் துணைத் தலைவர் பதவியைப் பெற்றார்.


இதுவரை 88 டெஸ்ட் போட்டிகளில் (2005 - பாகிஸ்தானுக்கு எதிரான கொல்கத்தா போட்டிவரை) விளையாடி யுள்ள ராவிட் 7658 ஓட்டங்களைக் குவித் துள்ளார்.

இதில் 20 சதங்களும், 36 அரைச்சதங்களும் அடங்கும்.

இந்த வீரரைப் பார்த்து பயப்படாத எதிரணித் தலைவர்களே கிடையாது. குறிப்பாக அவுஸ்திரேலிய அணித் தலைவருக்கே ராவிட் என்றால் ஒரு கலக்கம்தான்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் துடுப்பாட்ட வரிசையில் ராவிட் முதல் இடத்தை வகிப்பதன் மூலம் அவரின் சிறப்பை அனைவரும் அறிந்து கொள்ள முடியும். ஆனாலும் அணிக்காக அயராது பாடுபடும் இவர் அணியில் எவ் வாறு மதிக்கப்படுகிறார் என்பது கேள்வியே.

# வல்லவனுக்கு வல்லவன்



**சர்வதேச** விளையாட்டுப் போட்டிகளில் ஒவ்வொருவரும் அவரவர் துறைகளில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளனர். முகமட்அலி, ஜெசிஓவன், ஸ்விஸ்ட் செம்பர்லன், பேலே, டொனால்ட் பிரட்மன், ரோட்லேவர், மாக்ஸ்பீட்ஸ், மாட்டின நவரத்னலோவா போன்றோர் இதற்கு உதாரணமாவர்.

அது போல் மோட்டார்கார் பந்தயத்தில் வில்லாதி வில்லனாகத் தற்போது கருதப்படுபவர் மைக்கல் சூமாக்கர் ஆவார். இவர் குறோன் பீ போட்டிகளில் பங்கேற்று சம்பியன் பதக்கம் வென்றுள்ளார். இவருக்கு முன்பும் பல வீரர்கள் இருந்திருப்பினும் அவர்களை எல்லாம் பின்தள்ளி இவர் முன்னிலை வகிக்கிறார்.

இதன் பெருமை தனது குடும்பத்தவருக்கே உரித்தாகும் என அவர் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார். இவர் கார் பந்தயங்களைவிட சமூக அபிவிருத்திக்காக நடைபெறும் கால்பந்தாட்டப் போட்டிகளிலும் பங்கேற்பதாகத் தெரிவிக்கிறார். அத்துடன் அண்மையில் சுனாமி அனர்த்த நிதிக்காக இவர் 10 மில்லியன் டொலர்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# பிரபலங்களில் முதன்மையானவன்



**உலகில்** பல தரப்பட்டவராலும் பார்த்து ரசித்து மகிழும் பிரபல்யமான ஆட்டம் கால்பந்தாட்டமாகும். கால்பந்தாட்ட வீரர்களும், ரசிகர்களும் 2006 ஆம் ஆண்டில் நடைபெறும் உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அத்துடன் அது எந்த வகையில் முடிவுறும் என்பதையும் பரபரப்புடன் எதிர்பார்த்துள்ளனர். எவ்வாறாயினும், 2006 ஆம் ஆண்டின் உலகக்கிண்ணப்போட்டி ஜேர்மனியைப் போன்று பிரேசிலுக்கும் முக்கியமான ஒரு போட்டியாகும். காரணம் அவையிரண்டும் மிகப் பலமான அணி



என்பதாகும்.எனினும் இதில் பிரேசில் தகுதிப் போட்டிகளில் வென்று இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்படவேண்டிய நிலையிலுள்ளது. பிரேசிலைப் பொறுத்தவரை றொனால்டினோ, றொனால்டோ, டெனில்சன்,றொபோர்ட்டோ கார்லோஸ் போன்ற பிரபல வீரர்களைக் கொண்டிருப்பதால் அவர்களது எதிர்பார்ப்பு மிக அதிகமாகும். அதிலும் 2004 ஆம் ஆண்டு கிண்ணத்தைக் கைப்பற்ற உதவிய றொனால்டினோவில் மிக நம்பிக்கை வைத்துள்ளனர். அதுமட்டுமன்றி சர்வதேச கால்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள் 157 பேரும், அணித்தலைவர்கள் 145 பேரும் உள்ளிட்ட ஒரு தீர்வு மன்றத்திலும், றொனால்டினோ பற்றிய சிறப்பு தெரிவிக்கப்படுகிறது. இந்த வகையில் உலகில் சிறந்த முதல்தர கால்பந்தாட்ட வீரர் என 620 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கின்றார். இவர் இவ்வாறு முன்னேறியது சுலபமாக வல்ல ஏனைய வீரர்களின் விமர்சனங்கள், பயிற்சியாளர்களின் வெட்டுக்குத்து சர்வதேச கால்பந்தாட்ட சபையினரின் அச்சுறுத்தல் என்பவற்றினூடாகவே இவர் முன்னேறியுள்ளார்.

1980ஆம் ஆண்டில் பிறந்த இவர் இத்துறையில் அறிமுகமானது அவரின் சகோதரரான றொபர்ட்டோ ஐஸ் என்பவரின் ஊக்குவிப்பாலாகும்.

றொபர்ட்டோ கால்பந்தாட்டத்தில் பிரபல்யம் அடைவதை நோக்கி றொனால்டினோ தாமும் இவ்வாறு சிறந்த வீரராக வரவேண்டுமென கனவு கண்டார். அதன்படி 16, 17 வயதின் கீழான போட்டிகளில் இவர் பங்குபற்றி அதிக கோல்களைப் பெற்றுள்ளார். அதன் பயனாக 1998 ஆம் ஆண்டு கிறேமியர் அணியில் இவர் நிரந்தரமாக தொழில் ரீதியாக இணைத்துக்கொள் ளப்பட்டார்.

1996ஆம் ஆண்டு தேசிய அணிக்காக ஆடி லித்வியாவை வென்றார்.

2001ஆம் ஆண்டு இவர் பாரிசின் சென்ஜர்மன் கழகத்துடன் ஒப்பந்தமாகினார். 2002ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப்போட்டிகளில் இவரின் பங்கு சிறப்பாக காணப்பட்டது அப்போட்டியின் அரையிறுதியில் இங்கிலாந்துக்கெதிராக இவர் அடித்த கோல் 35 மீற்றர் தொலைவிலிருந்து என்பது குறிப்பிடத்தக்கதுடன் இதனை மறந்துவிடவும் முடியாது.

அதற்கிடையில் சென் ஜர்மியன் அணி பயிற்றுநருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக இவர் பார்சிலோனா அணியுடன் ஒப்பந்தம் செய்ய விருப்பந் தெரிவித்தார்.

அந்த அணியுடன் 25 மில்லியன் யூரோவுக்கு ஒப்பந்தம் செய்து ஆடிய போதும் அவரின் மனநிலை திருப்தியடையவில்லை அந்த அணி வீரர்களுடனும், பயிற்றுநர்களுடனும் ஏற்பட்ட கருத்து மோதலால் மீண்டும் பிரேசில் அணிக்காக ஆட வந்தார்.

இவரின் திறமையில் நம்பிக்கை வைத்து அணி 2006 உலகக்கிண்ணத்தை கண் வைத்துள்ளது.

வடிவேல்

# சந்திரிகாவை அரசியலிலிருந்து நீக்க சு.க.வினருடனிணைந்து பிரதமர் முயற்சி

## சிறையிலிருந்து தெரிவிக்கிறார் எஸ்.பி.திஸாநாயக்க

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவை அரசியலிலிருந்து அகற்ற பிரதமர் மகிந்தராஜபக்ஷ சுதந்திரக் கட்சியினருடன் இணைந்து திட்டம் தீட்டிவருவதாக சிறையில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதைத் தெரிவித்துள்ளார். அவர் அதில் கூறியுள்ளதாவது; சர்வசன வாக்கெடுப்பை சந்திரிகா நடத்தினால் அவரது கட்சி உடைந்துவிடும். பெரும்பான்மையான சுந்திரக் கட்சியினர் இந்த வாக்கெடுப்புக்கு எதிராகவே உள்ளனர். அதிகாரத்தை சந்திரிகா தக்க வைத்துக்கொள்ள முயல்கிறார். ஆனால அவரது கட்சியினர் அதை விரும்பவில்லை. சந்திரிகாவுக்குப் பின்னால் ஐந்தே நபர்கள்தான் உள்ளனர். மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர், ரட்ணசிறி விக்கிரம நாயக்க, அநுரா பண்டாரநாயக்க மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் தான் அந்த ஐவர். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சுதந்திரக் கட்சியினர் சந்திரிகா, அரசியலிலிருந்து ஓய்வுபெற வேண்டும் என்றே எண்ணி வருகின்றனர். சனநாயம் குறித்தோ, நாகரிகத் தன்மை குறித்தோ சந்திரிகாவுக்கு எதுவும் தெரியாது. அவர் ஒரு முரண்பாடானவர். ரணில் விக்கிரமசிங்க கூட முதலில் சந்திரிகாவுடன் இணக்கப் போக்கை மேற்கொள்ள முயன்றார். பாராளுமன்றக் கலைப்புக்குப் பின்னரே சந்திரிகா யார் என்பதை அவர் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறார். எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பரில் நாடு இன்னொரு பொதுத் தேர்தலை கண்டிப்பாகச் சந்திக்கும். நான் அதற்கு இப்போதே தயாராகி வருகிறேன். சந்திரிகாவுடன் என்னை சமாதானமாக்க பலர் முயற்சித்து வருகின்றனர். ஒரு பிரிவினர், எனது தாயாரை சந்திரிகாவுடன் சந்திக்க வைக்க முயற்சித்தனர். இப்போதும் கூட சந்திரிகா தரப்பினர் சிலர் இரகசியமாக என்னை சிறையில் சந்தித்து வருகின்றனர். எந்த சூழ்நிலையிலும் சந்திரிகாவுடன் எந்த ஒரு இணக்கத்தையும் உருவாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருப்பதிலேயே தற்போது பெருமடைகிறேன் என்றார்.

# க.பொ.த.சா/த,உயர் தர பாடங்களில் நவீன தொழில் நுட்பப்பாடங்கள்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தரப்பரீட்சைகளுக்கு தகவல் தொழில் நுட்பம் ஒரு பாடமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றிற்கு மேலதிகமாக நவீன தொழில்நுட்பப்பாடங்களும் பாடவிதானத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. இரண்டு வருட காலத்தில் சகல நவோதய பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படவுள்ளன. அதேசமயம் மூன்று இணைந்த பல்கலைக்கழகங்களும் மூன்று புதிய பல்கலைக்கழகங்களும் உருவாக்கப்படுமெனவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

# மின்கோபுரத்தில் ஏறியிருந்து மி.சபை ஊழியர் போராட்டம்

இலங்கை மின்சார சபையின் ஊழியர் ஒருவர் 80 அடி உயரமான கோபுரத்தில் ஏறியிருந்து எதிர்ப்பு போராட்டமொன்றில் ஈடுபட்டுள்ளார். இலங்கை மின்சார சபையை மறு சீரமைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று அதிகாலை முதல் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார். இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப் படலாமென்று உறுதிமொழி வழங்கப்படும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# கொழும்பில் பாடசாலை செல்லாத சிறுவரின் தொகை அதிகரிப்பு

கொழும்பு பொலிஸ் பிரிவில் 706 சிறுவர்கள் பாடசாலைக் குச் செல்வதில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத்தின் தகவலின் படி இதில் 205 பேர் சிங்களவர்கள் 222 பேர் தமிழர்கள் 279 பேர் முஸ்லிம்களாவார். இவர்களை வீதிகளில் வாழும் நிலைக்குத் தொடர்ந்து உட்படுத்தினால் நிச்சயமாக அவர்கள் குற்றவாளிகளாக மாற்றப்படும் சூழ்நிலை உருவாகுமென சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் இவர்களுக்கென கற்றல் திட்டம் ஒன்றை தாம் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுனாமி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரச வங்கிகளினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணக் கொடுப்பனவுத் தொகை இனிமேல் அத்தியாவசியமாக நிவாரணம் தேவைப்படும் குடும்பங்களுக்கு மாத்திரமே வழங்கப்படவுள்ளதாக அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இரண்டு லட்சம் குடும்பங்களுக்கு இதுவரை மாதாந்தம் 5,000 ரூபா வீதம் அரச வங்கிகளினால் வழங்கப்பட்டு வந்தன. இதுவரை இந்த நிவாரணக் கொடுப்பனவு எவ்விதப் பாகுபாடுமின்றி பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு நிவாரணம் பெறுபவர்களிடையே அரச ஊழியர்கள், வியாபாரிகள் மற்றும் வேறு தொழில் செய்வோர் என அனைத்து தரப்பினரும் உள்ளதாகத் தெரிய வந்ததையடுத்து நிவாரணம் அத்தியாவசியமாகத் தேவைப்படுபவர்கள் யார் என்பதைக் கண்டறிய அரசாங்கம் ஆய்வொன்றை நடத்தவுள்ளது. இதற்கமைய தமது வீடுகளை முற்றாகவோ அரைவாசியாகவோ இழந்த வர்கள் மற்றும் தமது தொழில்களை இழந்தவர்கள், வாழ்க்கையைக் கொண்டு நடத்த வழியற்றவர்கள் ஆகியோருக்கே இந்த மாதாந்தக் கொடுப்பனவான 5,000 ரூபா வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் மாதாந்தம் 5,000 ரூபா நிவாரணத் தொகையைப் பெறும் குடும்பத்தின் எண்ணிக்கையை ஒரு இலட்சத்து 25 ஆயிரமாகக் குறைக்க முடியும் என அரசு நம்புவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# புலிகளின் விமானஓடுதளம் தொடர்பில் வெளியிட்ட செய்திகளால் அரசுக்கு அபகீர்த்தி

புலிகளின் விமான ஓடு தளம் தொடர்பில் போலித் தகவல்களை வெளியிட்டதால் சர்வதேச ரீதியில் அரசாங்கத்திற்கு பாதக நிலை ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

புலிகளின் இரணைமடு விமான ஓடு தளம் தொடர்பில் 1995 ஆம் ஆண்டு தகவல்கள் வெளியிடப் பட்டிருப்பதாகவும் தற்போது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரே இது அமைக்கப்பட்டதாக அரசாங்கம் வெளியிட்ட தகவல்கள் போலியானவை என்றும் சில சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதோடு வெளி நாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் லண்டனில் வைத்து சில பிரித்தானிய அரசியல் பிரமுகர்கள் வினா எழுப்பியிருப்பதாகவும் இதற்குப பதிலளிப்பதில் அமைச்சர் கதிர் காமர் பெரிதும் சங்கடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்கு சேவை நீடிப்பு வழங்க நடவடிக்கை

## அமைச்சர் சிறிபால டி.சில்வா

ஓய்வு பெறும் வயதெல்லை அடைந்த அறுவைச்சிகிச்சை நிபுணர்களுக்கு அவர்களின் செயற்பாட்டுத் திறனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் சிறிபால டி.சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அமைச்சர் விஜயம் செய்தபோது அங்கு அறுவைச் சிகிச்சை நிபுணர் கடமையாற்றவில்லை. சேவை நீடிப்புடன் பணிபுரியும் அறுவைச்சிகிச்சை நிபுணர் விடுமுறையிலிருந்ததால் இந்த நிலை ஏற்பட்டது.

அதன் பின்னர் அங்கு இடம் பெற்ற திருமலை பொது வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் இந்த நிலை பற்றி குறிப்பிட்டதுடன், திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு “ இரு அறுவைச் சிகிச்சை நிபுணர்களை நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இரண்டு அறுவைச்சிகிச்சை நிபுணர் பதவிகள் நிரப்பப்படும் வெளிநாட்டில் பயிற்சி பெற்று திரும்பும் அறுவைச் சிகிச்சை நிபுணர்களில் ஒருவர் திருமலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்படுவார்” என்று தெரிவித்தார்.

திருகோணமலை பொது வைத்தியசாலை வைத்திய சுப்ரின்டன்ட் டாக்டர் திருமதி. கௌசிஞான குணாளன வைத்தியசாலையில் அவசரமாக நிறை வேற்றப்பட வேண்டிய தேவைகள் பற்றி அமைச் சரிடம் மகஜர் ஒன்றைக் கையளித் தார். திருமலை வைத்தியசாலையில் ஒவ்வொரு வைத்தியத் துறைக்கும் இரண்டு நிபுணர்கள், ஆய்வுகூட வசதிகள் பலப்படுத்தல், எக்ஸ்ரே இயந்திரம் மற்றும் சிற்றூழியர் பற்றாக்குறை நீக்கம் ஆகிய கோரிக்கைகள் மகஜரில் இடம் பெற்றிருந்தன.

# பொலிஸ் நிலையங்களின் நடவடிக்கையை நீதவான் கண்காணிக்க சட்டத்திருத்தம்

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களின் நடவடிக்கைகளை நீதவான்கள் கண்காணிக்கும் விதத்தில் சட்டங்கள் திருத்தப்படவுள்ளன. குற்றச் செயல்கள் சம்பந்தமான வழக்குகளை துரிதமாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழு இந்தப் பரிந்துரையைத் தெரிவித்துள்ளது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சி.ஆர்.டி.சில்வா கருத்துத் தெரிவிக்கையில்; இந்த உத்தேச சட்டத்தின் கீழ் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் குற்றவாளிகள் சம்பந்தமான சட்ட நடவடிக்கைகளை முன்னறிவித்தல் எதுவுமின்றி நீதவான்கள் மேற்கொள்ளக் கூடியதாக இருக்குமென்று கூறினார். இந்த நடைமுறையை நீதிப்பரிபாலன சேவைகள் ஆணைக்குழு மூலமும் சட்டபூர்வமாக ஆக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதம நீதியரசர் சரத் என்சில்வா உறுதியளித்துள்ளார்.




எச்சரிக்கை!

Koyo ® இந்த மண்ணிலும் போலிகளா?

ஏமாற்றுபவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

நாங்கள் உங்களுக்குத் தருவது

அசல் கோயோ ரேசர்களே

பயன் பெறும் உங்களுக்கு இதன் பெருமை புரிந்திருக்கும்.

இம்மண்ணிலும் போலிகளா?

எம்மையும் ஏமாற்றுகின்றீர்களா?

- ஜப்பான் ஒரிஜினல் கோயோ ரேசருக்கு பதிலாக போலி ரேசருக்கு ஒரிஜினல் கோயோ ரேசரின் குறியீட்டை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி, போலிகளை ஒரிஜினல் என்று பாவனையாளர்களை ஏமாற்றி, கொள்ளை இலாபம் பெறும் நோக்கில் ரேசர்களை விற்கும் சில வியாபாரிகளைப் பற்றி நாம் அறிய வந்துள்ளோம். இதனைப் பற்றிப் பாவனையாளர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.
- ஐயா! போலி ரேசர் அல்லது நல்ல ஒரிஜினல் தனித்துவமான கோயோ ரேசர் பொருத்துவதற்கும் செலவு ஒன்று தான். ஆனால் ஒரிஜினல் கோயோ ரேசர்களின் பாவனையோ நீண்டகாலம். போலி ரேசர்களின் பாவனை குறைந்த காலமே. இதில் எதைத் தெரிவு செய்வது என்பது பாவனையாளர்களாகிய உங்களின் கைகளில்.
- நாம் இதனைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகளுடன் இணைந்து, தகுந்த சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பாவனையாளராகிய நீங்கள் எங்களுக்கு உதவுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

வார்ப்பிலேயே Koyo ® வெனப் பார்த்து வாங்குங்கள்.

நீண்டபாவனைக்கும் நீடித்த உழைப்பிற்கும் உத்தரவாதம் அளிப்பது

எங்கள் Koyo ® ரேசர்களே!

Koyo ®

செரண்டிப் மோட்டர் என்ரபிறைசஸ் (பிரை.) லிமிட்டட்.

60 B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி : 011 2341580 - 1, 011 2438779

தொலைநகல்: 011 2454608

(சி 10592)

# இந்தியாவுக்கு நவீன போர் விமானங்களை வழங்கும் அமெரிக்காவின் முயற்சி பரிசீலிக்கப்பட வேண்டியது!

**-இந்திய இராணுவத்துறை அமைச்சர் பிரணாப்முகர்ஜி**


இந்தியாவுக்கு நவீன வகைப் போர் விமானங்களை வழங்க அமெரிக்கா முன்வந்திருப்பது பற்றி ஆலோசித்து முடிவெடுக்கவுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

கொல்கத்தாவுக்கு வருகை தந்த இராணுவத்துறை அமைச்சர் பிரணாப்முகர்ஜி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுக்கு எப்-16 எனும் நவீன ரக போர் விமானங்களை விற்கப் போவதாக அண்மையில் அமெரிக்கா தெரிவித்ததற்கு இந்தியா தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து இந்தியாவுக்கு எப்-18 எனும் நவீன ரக விமானங்களை விற்பனை செய்ய அமெரிக்கா தயாராகவுள்ளதாகத் தெரிவித்ததையடுத்து பிரணாப் முகர்ஜி பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில்; பாகிஸ்தானுடன் ஆயுதப் போட்டியில் ஈடுபடும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை. இதன் மூலம் இந்தியா ஆயுதப் போட்டியில் ஈடுபட்டுள்ளது என்று யாரும் குற்றம் சுமத்த முடியாது.

இதற்கு முன்னர் நவீன போர் விமானங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்ய அமெரிக்கா முன்வந்திராத நிலையில் தற்போது முன்வந்திருப்பதானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இது பற்றி நாம் பரிசீலனை செய்தே முடிவெடுப்போம்.

இந்தியாவில் முப்படைகளுக்கும் நவீன போர் விமானங்கள் தேவைப்படுகிறது என்பது உண்மை தான் எனவே இது பற்றி மிகவும் கவனத்துடனேயே செயற்படவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டி.ராஜா புதுடில்லியில் வைத்து நிருபர்களிடம் பேசும் போது அமெரிக்காவிடம் போர் விமானங்களை வாங்கக் கூடாது. அமெரிக்கா விரித்துள்ள சதிவலையில் இந்தியா சிக்கிவிடக்கூடாது. ஆசியாக் கண்டத்தில் ஆயுதப்போட்டியை வளர்த்துவிடும் நிலைமையை உருவாக்கிவிடும் முயற்சிகளையே அமெரிக்கா மேற்கொள்ளுகிறது. இது ஆபத்தான பின்விளைவுகளையே ஏற்படுத்திவிடும். அத்துடன் அமெரிக்கா உற்பத்தி செய்யும் ஆயுதங்களை உலக சந்தையிலே விற்பதிலேயே கூடுதலாகக் கவனம் செலுத்தி வருகின்றது. இந்தச் செயலுக்கு இந்தியாவும் துணை போகக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ் நாடு சென்னையில் பொலிசாரைச் சேர்த்துக் கொள்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை நடைபெற்றது. இதிலே பல ஆயிரம் பெண்கள் கலந்து கொண்டனர். கொழுத்தும் வெயிலிலும், தேர்வு எழுதும் பெண்களைக் காணலாம்.

# 90 கிலோ எடையுடைய தொலையுணர் செயற்கைக்கோளைத் தயாரிக்க இந்தியா திட்டம்!

(பெங்களூர்)

தொலையுணர் (மைக்ரோ) செயற்கைக்கோளைத் தயாரிக்க இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் திட்டமிட்டுள்ளது. இந்த செயற்கைக் கோளுக்கு 'டி.டபிள்யூ.சாட்' என்று பெயரிடப்படும் 90 கிலோ எடை கொண்டதாக இருக்கும். வளரும் நாடுகளுக்குத் தேவையான புகைப் படங்களை எடுப்பதற்காக இந்தச் செயற்கைக்கோள் விண்வெளிக்கு அனுப்பப்படும். இந்த செயற்கைக் கோளில் மூன்று வகையான நவீன புகைப்படக் கருவிகள் பொருத்தப் படும். இதிலிருந்து புகைப்படங்களைப் பெறுவதற்காக நாடு முழுவதும் 50 இடங்களில் நவீன கருவிகள் (ரேர்மினல்கள்) பொருத்தப் படும். இந்த நவீன கருவிகள் பல்கலைக்கழகங்களிலேயே அமைக்கப்படும்.


மேலும் உலக நாடுகளுக்கும் இந்தப் புகைப்படங்கள் அனுப்ப வழிவகை செய்யப்படும். விண்வெளித் துறையின் 2004/ 2005 ஆம் ஆண்டு அறிக்கையில் இத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. செயற்கைக்கோள் தகவல்களை பரிமாறிக்கொள்ள வங்கதேசம், நேபாளம், இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, மோரிஷஸ், மாலைதீவுகள் உள்ளிட்ட சில நாடுகளுக்கு இந்தியா உதவி வருகறது. மைக்ரோ செயற்கைக்கோளை எப்போது விண்வெளிக்கு அனுப்புவது என்று முடிவு செய்யவில்லை. இந்த ஆண்டு ஏப்ரலில் 42 கிலோ எடையுள்ள மற்றொரு மைக்ரோ செயற்கைக்கோளையும், இஸ்ரோ விண்ணில் செலுத்தவுள்ளது. இதற்கு 'ஹாம்சாட்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இஸ்ரோ தயாரித்துள்ள கார்ட்டோசாட் 1 தொலையுணர் செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி விண்கலம் மூலம் விண்ணில் செலுத்தப் படும். சென்னை அண்ணா பல்கலைக்கழகம் தயாரித்துள்ள அனுசாட் என்ற பெயருடைய 50 கிலோ எடையுள்ள மைக்ரோ செயற்கைக் கோளையும், இஸ்ரோ விண்ணில் செலுத்தவுள்ளது. அமெச்சூர் தொலைத்தொடர்பு பணிகளுக்காக இந்த செயற்கைக்கோள் விண்ணுக்கு அனுப்பப்படுகிறது.

# துப்பாக்கிகளைக் கைவிட்டு பேச்சுக்கு வர நக்சலைட்டுகளுக்கு ஆந்.காங்கிரஸ் அழைப்பு

துப்பாக்கிகளைக் கைவிட்டு இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முன் வருமாறு நக்சலைட்டுத் தலைவர்களுக்கு ஆந்திரா மாநில காங்கிரஸ் தலைவர் கே.கேசவராவ் அழைப்பு விடுத்துள்ளார்.

முதல் சுற்று சமாதானப் பேச்சுக்களின் போது நக்சலைட் இயக்கத் தலைவர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்தனர். அதில் முக்கியமாக நிலத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்ற அவர்களது கோரிக்கையை மாநில அரசு ஏற்று முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதே வேளை ஆந்திராவின் பல்வேறு இடங்களிலும் நக்சலைட்டுத் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றது. இதனைக் கைவிட வேண்டும் எனவும் கேட்டுள்ள கேசவராவ் துப்பாக்கிகளை வைத்திருப்பது தமது கொள்கையின் ஒரு பகுதி என நக்சலைட்டுக்கள் கூறியுள்ளதை காங்கிரஸ் தலைவர் கண்டித்துள்ளார்.



"சாஸ்திரா சீமாபேரல்" என அழைக்கப்படும் மத்திய பொலிஸ் படையினரின் 42ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற பொலிசாரின் அணி வகுப்பு மரியாதையை மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் பார்வையிடுகிறார்.

# சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் 150 குடிசைகள் எரிந்து நாசம்!

மகாராஷ்டிராவில் ஏற்பட்ட பெரும் தீவிபத்தில் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் 150 இற்கும் மேற்பட்ட குடிசைகள் தீயில் கருகி நாசமாயின. மகாராஷ்டிரா லாடூர் மாவட்டம் சக்கூர் தாலுகாவிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான தொழிலாளர்களின் குடியிருப்பில் கடந்த 20ஆம் திகதி தீ விபத்து ஏற்பட்டது. பரவிய தீயால் 150 இற்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து நாசமாயின. இச் சம்பவத்தில் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. எனினும் ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருட்சேதம் ஏற்பட்டிருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது. விபத்திற்கான காரணம் குறித்து உடனடித் தகவல் ஏதுமில்லை. வீடுகளை இழந்தோருக்கு ஆயிரம் ரூபா நிவாரணத் தொகை வழங்கப்படும் எனத் தொழிற்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. சம்பவ இடத்தை மாவட்ட செயலாளர் மற்றும் பொலிஸ் கண்காணிப்பாளர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.




SRILANKA RED CROSS SOCIETY
Kilinochchi Branch
*Computer Training Programme:-2005*
கணினிப் பயிற்சித் திட்டம்:-2005



T.P.No :- 021- 2285843

**Course -01**
**Diploma In Office Manaement.**
- *Introduction To Fundamentals*
- *Micro Soft Word - 2002 Xp*
- *Micro Soft Powerpoint- 2002 Xp*
- *Micro Soft Excel - 2002 Xp*
- *Micro Soft Access - 2002 Xp*
- *Micro Soft Windows Operating System -2002 Xp*

*Duraton -05 Months*

**Course -02**
**Diploma In Desktop Publishing.**
- *Introduction To Fundamentals*
- *Adobe Photo Shop ( Ver 7.0)*
- *Photo Impact*
- *Adobe PageMaker ( Ver 7.0)*
- *Corel Draw ( Ver 11)*

*Duraton -05 Months*

**Course -03**
**Diploma in Multimedia Graphics.**
- *Introduction To Fundamentals*
- *Micromedia Flash*
- *Gif Animator / Cool 3D*
- *Photo Shop*
- *Photo Impact*
- *Adobe Premier*

*Duraton -05 Months*

**Course -04**
**Diploma in Hardware Engineering.**
- *Introduction To Fundamentals*
- *Computer Assembling*
- *Software Installation*
- *Computer Software Upgrading*
- *Computer Troubleshooting*
- *System Configuration*

*Duraton -03 Months*

கிளிநொச்சிமாவட்ட மாணவர்களினதும் அலுவலாகளினதும், தகவல் தொழில்நுட்பத்திறனை அபிவிருத்திசெய்யும் திட்டத்திற்கமைய கணினிப் பயிற்சி நெறிகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக்கிளையினால் புதிய பிரிவுகள ஆரம்பிக்கப்படவுள்ளன. மேற்படிகற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவுத்திகதி :-19.04.2005**

**விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்**
***விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி***

உங்கள் பதிவுகளுக்கு இன்றே விரையுங்கள்

தலைவர்/செயலாளர்,
கணினிப் பிரிவு
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சிக்கிளை,

(5906)

# சுழலில் சுருண்டது இந்திய அணி 168 ஓட்டங்களால் பாக். அபாரவெற்றி



இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பெங்களூரில் நடைபெற்று வந்த மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 168 ஓட்டங்களால் வெற்றி பெற்று போட்டித் தொடரை 1-1 என்ற நிலையில் சமன் செய்தது.



போட்டியின் இறுதி நாளான நேற்று 383 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களுடன் ஆரம்பித்த இந்தியா 214ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் கம்பீர் 52, சேவாக் 38 ஓட்டங்களையும் கும்ளே ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.


முன்னணி வீரர்களான சச்சின் 16 ஓட்டங்களுடனும், கங்குலி இரண்டு ஓட்டங்களுடனும் லக்ஷ்மன் ஐந்து ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் அப்ரிடி மூன்று விக்கெட்டுக்களையும், கனேரியா, அர்ஷட்ஹான்,சமி தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக முதல் இனிங்சில் 267 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் ஆட்டமிழக்காது 84 ஓட்டங்களையும் பெற்ற பாகிஸ்தான் அணியின் துணைத்தலைவர் யுனிஸ்ஹான் தெரிவானார். போட்டித் தொடர் நாயகனாக 500இற்கு மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்த இந்தியாவின் சேவாக் தெரிவானார்.




# நியூசிலாந்துக்கு எதிரான இறுதி டெஸ்ட்; வெற்றிப்பாதையில் அவுஸ்திரேலிய அணி



நியூசிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஒக்லாந்தில் நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவின் கை மேலோங்கியுள்ளது.


நியூசிலாந்து பெற்ற முதல் இனிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையான 292 ஓட்டங்களுக்குப் பதிலளித்து தனது முதல் இனிங்சைஆடிய அவுஸ்திரேலியா 383 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பொண்டிங் 105 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் ஆட்டமிழக்காது 62 பந்துகளில் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிறாங்லீன் ஆறு விக்கெட்டுக்களையும், மர்டின், அஸ்ரல், வைஸ்மன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

91ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த நியூசிலாந்து அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 4.5 ஓவர்கள் துடுப்பாடி11 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களைப்பரிதாபமாக இழந்தது.

இரண்டு விக்கெட்டுக்களையும் மெக்ராத் கைப்பற்றினார்.



மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் ஏற்கனவே முன்னிலையில் இருக்கும் அவுஸ்திரேலியா இப்போட்டியிலும் வெற்றிபெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.




# உலகக் கோப்பை தகுதிச்சுற்று செனகல் அணி முன்னிலையில்

உலகக் கோப்பை தகுதிச் சுற்று கால்பந்து போட்டியில் செனகல் முன்னிலை பெற்றுள்ளது. ஜேர்மனியில் வரும் 2006 இல் உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடக்கிறது. இதற்கான தகுதிச்சுற்றுப் போட்டிகள் தற்போது நடந்து வருகின்றன. ஆபிரிக்க நாடுகளுக்கு கிடையிலான போட்டியில் 2002 உலக கோப்பை தொடரில் காலிறுதி வரை முன்னேறிய செனகல், லிபிரியா அணியை எதிர்த்து விளையாடியது. இதில் செனகல் 6-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது.இதன் மூலம் குழு ஒன்றில் இந்த அணி 13 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றுள்ளது. குழு இரண்டில் தென்னாபிரிக்கா 2-1 என்ற முன்னிலையில் உகண்டாவை வென்றது.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான தகுதிச் சுற்றுப் போட்டியில் துருக்கி 2-0 என்ற முன்னிலையில் அல்பானியாவையும், நெதர்லாந்து 2-0 என்ற முன்னிலையில் ரோமானியாவையும், செக் குடியரசு 4-3 என்ற முன்னிலையில் பின்லாந்தையும் வென்றன. பிரான்ஸ்,சுவிட்சர்லாந்து இடையிலான போட்டி கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்தது. இங்கிலாந்து 4-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வென்றது.




தைபேயில் நடந்த சர்வதேச எக்ஸ்பிரஸ் மரதன் போட்டியில் கென்ய வீரர் டேவிட் கிரியுகி (2மணி 16 நிமிடம் 12 வினாடிகள்) வெற்றி பெற்றார்.

# ஆனந்த் பரிதாப தோல்வி

மொனாக்கோவில் நடந்த கிராண்ட் மாஸ்டர்களுக்கான செஸ் பந்தயத்தில் இந்தியாவின் ஆனந்த் பரிதாப தோல்வி அடைந்தார்.

கிராண்ட் மாஸ்டர்களுக்கான வேகமான செஸ் பந்தயம் மொனாக்கோவில் நடந்து வருகிறது. இந்தப் போட்டிக்கான நேற்றைய ஆட்டத்தில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த்- ரஷ்ய வீரர் எவ்னி பரீவ் ஆகியோர் மோதினார்கள் மொத்தம் இரண்டு மோதல்கள் நடந்தது முதல் போட்டியை சமன் செய்த ஆனந்த் தொடர்ந்து நடந்த மற்றொரு போட்டியில் பரிதாபமாகத் தோல்வி கண்டார். இந்தப் போட்டியில் ஆனந்துக்குப் பல வெற்றி வாய்ப்புகள் கிடைத்தபோதும் அவற்றை எளிதாக அவர் இழந்தார்.

# யாழ். மாவட்ட கால்பந்து சுற்றுப்போட்டி வளர்மதி, பல்கலை அணிகள் வெற்றி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வளர்மதி விளையாட்டு கழகமும் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணியும் வெற்றி பெற்றுள்ளது.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ரெட்ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும். யாழ். லீக்கைச் சேர்ந்த வளர்மதி விளையாட்டுக் .கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் தென்மராட்சி விளையாட்டுக்கழகமும், யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணியும் மோதிக் கொண்டன பல்கலைக்கழக அணி1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்.சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த டயானா விளையாட்டுக் கழகத்திற்குமான போட்டியில் டயானா விளையாட்டுக்கழகம் சமுகமளிக்காமையால் சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (41)

# இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப் படை மாவீரர் நினைவாகவும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ் மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

பருத்தித்துறை லீக்கைச்சேர்ந்த நவசக்தி விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக்கழகமும், வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அளவெட்டி விநாயகர் விளை யாட்டுக்கழகத்தினை எதிர்த்து யாழ் லீக்சைச் சேர்ந்த பாசையூர் சென்அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(41)




சாதனைக்கு விருது... டெஸ்டில் பத்தாயிரம் ஓட்டம் கடந்த சச்சின் டெண்டுல்கர், 2004இல் ஐ.சி.சி.சிறந்த வீரர். ராகுல் ராவிட் இந்திய அளவில் அதிக விக்கெட் வீழ்த்திய அனில் கும்ளே மூவருக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.


# பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பெருவிளையாட்டுப் போட்டி -2005

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 2005 ஆம் ஆண்டுக்கான பெருவிளையாட்டுப்போட்டிகள் ஏப்ரல் இரண்டாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேற்படி பிரதேச செயலக பதில் விளையாட்டு உத்தியோகத்தர் க.புவனேந்திரராஜா அறிவித்துள்ளார்.

எனவே கழகவீர வீராங்கனைகள் அனைவரையும் கீழ்க் குறிப்பிட்ட நாட்களில் காலை எட்டு மணிக்கு சமுக மளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

கரப்பந்தாட்டம் ஆண்,பெண் பொதுமைதானம், பளை, கபடி ஆண்,பெண் புலோப்பளை மைதானம், எல்லே ஆண்,பெண் பளை மத்திய கல்லூரி மைதானம், வலைப்பந்தாட்டம் பெண் பளை மத்திய கல்லூரி மைதானம், மென்பந்தாட்டம் ஆண் (ஆறுபேர் கொண்டது) புலோப்பளை மைதானம் மேற்படி போட்டிகள் இரண்டாம்திகதி தொடக்கம் ஐந்தம் திகதிவரை நடைபெறவுள்ளது.






வவுனியா கோட்ட மட்ட விளையாட்டுப்போட்டியில் வலய மட்டப்போட்டிக்குத் தெரிவான அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய அணிநடை அணியினையும், வெற்றி பெற்றமைக்காக வவுனியா தெற்கு வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா அணிநடைத் தலைவியிடம் வெற்றிக் கிண்ணத்தை கையளிப்பதனையும் படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு:- ஆறு சுபாஸ்கரன் )

## சிந்தனைக்கு



இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை; ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப் படுத்துகின்றது. மனித உரிமை, மக்கள் உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளதார - வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 29-03-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## நேரவிரயம்!

- விடுதலைப்புலிப் போராளிகள் மீது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் அண்மைக்காலங்களில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராய்வதற்காக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பொதுமக்கள் மற்றும் போராளிகள் என எவரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. இது சிறிலங்காவின் நீதித்துறை மீதும் அரசாங்கம் மீதும், தமிழ்மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கை/ நம்பிக்கையீனம் என்பதன் வெளிப்பாடே ஆகும்.

ஒரு புறத்தில் இவ் ஆணைக்குழு முன் தமிழ்மக்கள் சாட்சியமளிக்க முன்வராமைக்குக் காரணம் இதனைத் தமிழ்மக்கள் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை எனக் கொள்வதேயாகும். ஏனெனில் இத்தாக்குதல்கள் யாரால் நடத்தப்படுகின்றது என்பதும், இதற்கு ஆதரவு வழங்குபவர்கள் யார் என்பதும் அனைவருக்கும் தெரிந்த ஒன்றே.

இந்நிலையில் தெரிந்த ஒன்றிற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதும் விசாரணை மேற்கொள்வதென்பதும் மக்களையும் உலகையும் ஏமாற்ற அரசாங்கம் முற்படுவதாகவே அர்த்தம் கொள்ளத்தக்கதாகும். ஏனெனில் கடந்தகால வரலாறு இதனையே வெளிப்படுத்துவதாயுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ள ஆணைக்குழுவை தமிழ் மக்கள் நிராகரிப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று சிறிலங்கா நீதித்துறை மீதான நம்பிக்கையீனம், இரண்டு அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையீனம்.

சிறிலங்கா நீதித்துறையானது. தமிழ்மக்களுக்கு நீதி வழங்கத்தவறி விட்டது என்பதும் , ஊழல் மோசடி நிறைந்த தென்பதும் வெளிப்படையான ஒன்று. இதனைத் தமிழ்மக்கள் மட்டும் தெரிவிக்கவில்லை. சில சர்வதேச நிறுவனங்கள் கூட இதனை வெளிப்படுத்தியுள்ளன. இதனைச் சனாதிபதி சந்திரிகாவும் தனது பேச்சுக்களின்போது ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

சிறிலங்கா நீதித்துறையானது தனது செயற்பாட்டை மேம்படுத்திக்கொள்வதென்பது அவ்வளவு சுலபமானதொன்றல்ல. ஒரு புறத்தில் இது பணம் படைத்தவர்களால் ஆட்டிப்படைக்கப் படுகிறது. மறுபுறத்தில்,அரசியல்வாதிகளால் ஆட்சியாளர்களால் விலை பேசப்படுகின்றது. இந்நிலையில் சிறிலங்கா நீதித்துறை மீது தமிழ் மக்கள் எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்?

அடுத்ததாக சிறிலங்கா அரசாங்கத்தின் மீதும் அதன் ஆட்சியாளர்கள் மீதும் தமிழ்மக்களுக்கு நம்பிக்கைகிடையாது. இவ்வாறு நம்பிக்கை இல்லாமல் போனதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. ஏனெனில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதலுக்கு சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு மட்டுமன்றி அவர்களின் ஆதரவுடன் இயங்கும் தமிழ் தேசவிரோதக்குழுக்களும் காரணம் என்பதும் அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

இந்நிலையில் விடுதலைப்புலிகள் மீது யார் தாக்குதலை நடத்துவது என ஆராய்வதென்பது கண்கட்டிவித்தை போன்றது. அதாவது தெரிந்தவர்களை கண்களைக் கட்டிக்கொண்டு தேடுவது போன்றது. அதுமட்டுமன்றி அரசின் அனுமதியோ அன்றி ஆசீர் வாதமோ இன்றி இச்செயல்களில் ஆயுதப்படைத் தரப்போ, தமிழ் தேசவிரோதக்குழுக்களோ ஈடுபட முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

இந்நிலையில் விசாரணை எதற்கு? புலிகள் மீது வேறுயாராவது தாக்குதல் நடத்துகின்றார்களா என்பதைக் கண்டறிவதற்காகவா? இது ஒரு புறம் இருக்க சிறிலங்கா அரசாங்கம் கடந்த காலங்களிலும் பல ஆணைக்குழுக்களை நியமித்துள்ளது. ஆனால் விசாரணைகளை நடத்திய இவ்ஆணைக்குழுக்கள் பலவற்றின் தீர்ப்பே எதுவெனத் தெரியாது. அவ்வாறு வெளிவந்தது ஏதும் உண்டாயினும் அவற்றால் நீதி ஏதும் கிட்டியதாகவுமில்லை.

அதாவது நீதிமன்றங்களில் சாட்சியங்களுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் கூடத் தமிழ்மக்களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை. வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டும்; வழக்கு விசாரணைகள் இடம் மாற்றப்பட்டும்; சாட்சியாளர்கள் கலைக் கப்பட்டும் வழக்கு விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டமையுமே வரலாறாகும்

இத்தகைய நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் புதிய ஆணைக் குழுவினால் பயன்தான் என்ன? இது கண்துடைப்பிற்கே மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்பதைப் புரிந்துகொள்ளாத தமிழ் மக்கள் யாராவது இருப்பார்களா? ஆகையினால் யாராவது தமது நாளாந்தப் பணிகளைக் கைவிட்டு பயனற்றதொருவிடயத்திற்கு நேரத்தைச் செலவிடத்தான் விரும்புவார்களா? சனாதிபதி சந்திரி காவுக்கு உலகினை ஏமாற்ற இவ்ஆணைக்குழு தேவையாக இருக்கலாம். ஆனால் பயனற்ற ஒன்றிற்காகத் தமிழ்மக்கள் ஏன்தான் இதில் அக்கறைகொள்ள வேண்டும்? தமது நேரத்தை வீண் விரயம் செய்ய வேண்டும்?

# ஜே.வி.பி யின் அச்சுறுத்தலை அடுத்து விசேட அமைச்சரவைக் கூட்டம் ரத்து

மின்சார சபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத் தாபனப் பங்குகளை வெளியாருக்கு வழங்கல் ஆகியவற்றிற்கு ஒப்புதல் பெறுவதற்காக நேற்று மாலை நடைபெற இருந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதி செயல கத்தினால் விடுக்கப்பட்ட அறிவித்த லில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா மின்சாரசபை மறுசீராக் கல்- திறைசேரி வசமிருக்கும் சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்கில் மூன்றில் ஒன்றை இந்தியக் கூட்டரசு நிறுவனமான பாரதீய பெற்றோலிய நிறுவனத்திற்கு வழங்கல் ஆகிய நடவடிக்கைகளுக்கான ஒப்புதலைப் பெற இந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெற இருந்தது. அரசின் இவ்விரு நடவடிக்கைகளுக்கு ஆட்சிப் பங்காளிகளான ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவித்ததை யடுத்தே இந்த விசேட அமைச்சர வைக் கூட்டம் நடத்தப்படவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்விரு விடயங்க ளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்குமானால் அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதென சனிக்கிழமையன்று கூடிய ஜே.வி.பி யின் சிறப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருந்தது. கடந்த சனிக்கிழமை ஜே.வி.பி யின் அரசி யல் பீடம் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் அவசரமாகக் கூடியது. அக்கூட் டத்தில், அரச நிறுவனங்கள் ஒரு போதும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தல் காலத்தில் உறுதிமொழி வழங்கி யிருந்தது. எனவே தற்போது அதற் கெதிராகச் செயற்பட அனுமதிக்க முடியாது. ஆகையால் இந்த நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அமைச் சரவைக் கூட்டத்தில் ஜே.வி.பி யின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது இவ்விரு விடயங்களுக்கான ஒப்புதல் பெறப்பட்டால் அதற்கு எதிராக முக்கியமான அரசியல் முடிவுகளை எடுப்பது என்றும் ஜே.வி.பி திட்டமிட்டிருந்தது. இதையடுத்தே இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தை சனாதிபதி ரத்துச் செய்துள்ளாகக் கூறப்படுகிறது.

# யாழ்.எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலுக்கு திடீர் தட்டுப்பாடு

(நல்லூர்)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தின் ஊழியர்கள் வேலை நிறுத்தத் தில் நேற்று முதல் ஈடுபடலாம் என்ற நிலையில் யாழ்.குடாநாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் பெறுவதில் வாகன உரிமையாளர்கள் முண்டியடித்துக் கொண்டு நின்றார்கள். யாழ்ப் பாணம் நகரப்பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் நண்ப கலுக்கு முன்னரே பெற்றோல் முடிவடைந்து விட்டது என்ற அறி விப்புப் போடப்பட்டு இருந்தது. இதேநேரம் எரிபொருட்களை விற்பனை செய்யும் தனியார் வியாபாரிகள் போதியளவு எரிபொருளை பெற்றுப் பதுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர். (41)

# கடற்றொழில் அனுமதிப்பத்திர நடைமுறையை அனைத்து கடற்றொழிலாளர்களும் பகிஷ்கரிப்பர்

## -யாழ். கடற்றொழிலாளர் ச.ச.செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கடற்றொழிலாளர் களுக்கு மீண்டும் கடற்படையினரால் அமுல்படுத்தப்பட இருக்கும் கடற் றொழில் அனுமதிப்பத்திரம் (பாஸ்) நடைமுறையை அனைத்துக் கடற் றொழிலாளர்களும் ஒன்றிணைந்து பகிஷ்கரிப்பர் என யாழ்.மாவட்டகடற் றொழிலாளர் சங்க சமாச சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்துள் ளார்.

சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடம ராட்சி கடற்றொழிலாளர்கள் தற் பொழுது படிப்படியாகத் தமது தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்து பாதிக்கப்பட்ட தமது பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வடமராட்சி கடற்றொழிலாளர்களின் சுதந்திரமான மீன்பிடித்தலுக்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்தும விதமாக மீண்டும் கடற்றொழில் அனுமதிப்பத்திர நடைமுறையை அமுல் செய்யும் நடவடிக்கைகளில் சிறிலங்காக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். கடற்றொழிலாளர்களின் சுதந்திரமான தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதற்காகவும், இதன் மூலம் கடற்றொழிலாளர்களின் பொருளாதாரத்தைப் பாதிக்கச் செய்யும் நோக்குடனும் மீண்டும் கடற்படையினர் கடற்றொழில் அனுமதிப்பத்திர நடைமுறையைத் திணிக்க முயல்வதாகச் சுட்டிக்காட்டியுள்ள சூரியகுமார் கடற்படையினர் கடற்றொழில் அனுமதிப்பத்திரத்தை பெறவேண்டுமென்ற நடை முறையைக்கடுமையாக அமுல் படுத்த முயன்றால் அவ் அனுமதிப் பத்திரத்தைப் பெறாது அதனைப் பகிஷ்கரித்து தொழிலில் ஈடுபடுவதற்கு கடற்றொழிலாளர்கள் முடிவு செய்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

## - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் -

# மல்லாவி பூவரசங் குளக் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு

மல்லாவிப் பிரதேசத்திலுள்ள பூவரசங்குளக் கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் ஒன்றினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்றுத் திறந்துவைத்துள்ளது.

நண்பகல் 12.00 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட மல்லாவிப் பிரதேச பூவரசங்குளக் கிராமத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ள இப்பொது நோக்கு மண்டபமானது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுத வியுடனும், நிகொட் திட்டத்தின் அனுசரணையுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பாண்டி யன்குளம் துணுக்காய் அபிவிருத்தி நிறுவனத்தினால் நிறு வப்பட்ட தாகும்.

பூவரசங்குளக் கிராம மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத் தியைக் கருத்திற் கொண்டு நிறு வப்பட்டுள்ள இப்பொதுநோக்கு மண்டபத் திறப்புவிழாவிற்கு சமூகப் பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் மகேஸ்வரன் தலைமை தாங்கினார்.

ஆரம்ப நிகழ்வாக பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை பூவரசங்குளக் கிராம அலுவலர் பொன்னுத்துரை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிகொட் திட்ட சமூக உணர்வூட்டாளர் செல்வி. ரூபா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக்கொடியினை முல்லைத் தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத் தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ராமமூர்த்தி ஏற்றிவைத் ததையடுத்து பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்தி நிறுவனக் கொடியினை அதன் நிர்வாக அலுவ லர் செல்வி மைதிலி ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஆசியுரை யினை முல்லைத்தீவு மாவட்ட திட்ட இணைப்பாளர் பரமானந்தமும், வர வேற்புரையினை கிராம அபிவிருத் திச் சங்கத்தின் செயலாளர் நடராஜா வும் சிறப்புரைகளை தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் உதவி நிறை வேற்றுப்பணிப்பாளர் றீகன் முல் லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் ஆற்றினர். இத்திறப்புவிழா நிகழ்வில் பூவசரசங்குளக் கிராம மக்கள், போராளிகள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

-புலிகளின் சமாதான முயற்சிகள் குறித்து-

# சர்வதேச பேராசிரியர் குழுவிடம் விடுதலைப் புலிகள் விளக்கம்!



முடங்கி நிற்கும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்குஏதுவாகப் புலிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஒஸ்ரியாவில் சர்வதேச அமைதிக்கான பேராசிரியர்கள் குழுவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல் விவகாரக் குழுவின் பிரதிநிதிகள் ஒஸ்ரியாவில் சர்வதேச அமைதி முயற்சிகள் தொடர்பான முதுபெரும் கல்வியாளர் பேராசிரியர் ஜோகன் ஹால்டங்க் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேசினர்.

அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன் தினம் ஒஸ்ரியாவின் ஸ்டேட்செலய்னிங்கில் உள்ள சர்வதேச அமைதி முயற்சிகள் தொடர்பான நிறுவனத்தில் இச்சந்திப்பை மேற்கொண்டனர். வடக்குக் கிழக்கில் தற்போதைய அரசியல் சூழல், யுத்த நிறுத்த ஒப்பந்தநிலை, அமைதி முயற்சிகள், சுனாமிக்குப் பிந்திய சீரமைப்புப் பணிகள் ஆகியவை குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன் விளக்கினார். ஆழிப்பேரலை சீரமைப்புக்காக நோர்வே முன்வைத்த பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகவும், முடங்கி நிற்கும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு ஏதுவாகப் புலிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் சு.ப. தமிழ்ச் செல்வன் விளக்கினார். சு.ப.தமிழ்ச் செல்வனின் விபரங்களைக் கூர்ந்து கேட்டபேராசிரியர் ஜோகன் ஹால்டங்க், தமிழ்மக்களின் நலன்களுக்கான தமிழீழ விடுதலைப்புலிகளின் விட்டுக் கொடுப் புகள் குறித்துப் பாராட்டினார். பேராசிரியர் ஜான் ஹால்டங்க்குடன், நிறுவன இயக்குநர் குட்ரன் கிராமர், மற்றும் மூத்த ஆராய்ச்சியாளர் வில்பிரட்கிராப் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

-பருத்தித்துறையில் ஒன்பது அம்சக்கோரிக்கையை வலியுறுத்தி-

# ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கேற்ற பொதுஅமைப்புக்களின் கண்டனப்பேரணி

(வடமராட்சி)

கரையோரப்பகுதிகளில் மீனவக் குடும்பங்களை மீளக்குடியமர அனுமதித்தல், மீண்டும் மீனவர்களிற் கான பாஸ் அனுமதி மற்றும் உயர்பாதுகாப்பு வலயப்பிரச் சினைகள் உள்ளிட்ட ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று நடத்திய பேரணியில்ஆயிரக்கணக்கில் மக்கள்கலந்து கொண்டனர்.

காலை 10.45 மணியளவில், பருத்தித்துறை சிவன்கோவிலடியில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் அரசினது நடவடிக்கைகளிற்கெதிராக கோஷங்களை எழுப்பியவாறு கண்டனப் பேரணியில் கலந்துகொண் டனர். பேரணியின் முன்னணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களான கஜேந்திரகுமார் பொன் னம்பலம், கி.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் ஈழ வேந்தன் ஆகியோரும் வெகுசன அமைப்புகளின் பிரதிநிதிகளும் சென்றனர்.

யாழ். பருத்தித்துறை வீதியூடாக பருத்தித்துறை பிரதேசசெயலகத்தை சென்றடைந்த பேரணியில், கலந்து கொண்ட மக்கள் சார்பில் யாழ். மாவட்ட மீனவ சமாசங்களின் சம்மேளனத்தின் செயலர் சூரிய குமாரன், சனாதிபதிக்கான தமது மகஜரை பிரதேச செயலர் க.வசந்த குமாரிடம் கையளித்தார்.

பின்னர் அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டுச்சென்று தம்பசிட்டிப் பகுதியீல் அமைந்துள்ள இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின்வடமராட்சி அலுவலகத் தைச் சென்றடைந்தது. அங்கு கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக வதிவிடப் பிரதிநிதி விற்றோலியோனிடம் பாரா ளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்மகஜரைக் கையளித்தார்.

இதேவேளை இக்கண்டனப் பேரணிக்கு ஆதரவாக வடமராட்சிப் பகுதி முற்றாகமுடங்கிப்போயி ருந்தது. வர்த்தக நிலையம், பொதுசந்தைகள் மதியம்வரை மூடப்பட்டிருந்தன. அரசதிணைக் களம், கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் பாடசாலைகளில் வரவுகள் குறைவாக இருந்தது. மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. பருத்தித்துறை துறைமுகத்தின் பணிகளும் முடங்கியது. எனினும் நண்பகலுடன் இயல்புநிலை தோன் றியது. இதனிடையே இக்கண்டனப் பேரணியில் கலந்து கொள்ளக் கூடாதெனப் பல பகுதியிலும் மக்களைப் பொலிசார் அச்சுறுத்தி யதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித் தனர். (27,41,33)

## மக்களை...

உள்ளனர். சுனாமிப்பேரலைத் தாக்கம் சம்பந்தமான அறிவித் தல்களை விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினரும், கடற்புலிகளும் இரவோடிரவாக மேற்கொண்டு மக்களை அப்பகுதிகளில் இருந்து வெளியேற்றும் நட வடிக்கைகளில் ஈடுபட்டனர்.

யாழ். குடாநாட்டின் வடமராட்சி கரையோரப் பகுதிமக்கள் அப்பகுதிகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான பிரதேசங்களுக்கு நகர்ந்துள்ளனர்.

இப்பகுதிகளில் உள்ள பொது அமைப்புக்கள் சுனாமி எச்சரிக்கை அறிவிப்புக்களை ஒலிபெருக்கி மூலம் இரவிரவாக மேற்கொண்ட வண்ணமிருந்தன.

மன்னார் பிரதேசத்தில் தாழ்வுப்பாடு, பேய்த்தாழை தலைமன்னார், எமில்நகர் பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி மன்னார் தீவு நடுப்பகுதிக்கு வந்து சேர்ந் துள்ளனர்.

இங்கு சுனாமி எச்சரிக்கைகளை பொது அமைப்புக் களும் ஆலய நிர்வாகத்தினரும் ஒலிபெருக்கிகள் மூலம் மேற்கொண்டவண்ணமிருந்தனர்.

பூநகரி நாச்சிக்குடா பகுதிகளில் சுனாமி எச் சரிக்கை அறிவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

முல்லைத்தீவு பகுதியில் சுனாமி எச்சரிக்கை அறி விப்புக்கள் இரவிரவாக மேற்கொள்ளப்பட்டு மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

சுனாமி எச்சரிக்கை தொடர்பாக இரவு உடனடியாக விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அறிவிப்புக்களைத் தொடர்ந்து முல்லைத்தீவு கடற்கரை பிரதேச மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து சென்றுள்ளனர்.

நேற்று இரவுஒருமணிக்குள் இப்பகுதிகளில் இருந்து தொண்ணூறு வீதமான மக்கள் விரைவாக அப்புறப் படுத்தப்பட்டனர்.

தமிழீழ போக்குவரவுக் கழகபேருந்துகள்,தனியார் பேருந்துகள் மற்றும் ஏனைய சகல வாகனங்களும் அதி காலைவரை மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

மேலும் மக்கள் கால்நடையாகவும் துவிச்சக்கரவண்டி மூலமும் உந்துருளிகள் மூலமும் வெளியேறி உள்ளனர்.

பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் யாவரும் வீதி யோரம் எங்கும் பரவலாக மிகவும் சோர்வான நிலையில் காணப்பட்டனர்.

முல்லைத்தீவில் இடைத்தங்கல் முகாம்களில் இருந்த மக்கள் உட்பட அம்பலவன் பொக்கணைதொடக்கம் வட்டு வாகல் முல்லைத்தீவு சிலாவத்தை வரையானகரையோரப் பகுதி மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களான புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை பகுதிகளுக்கு வந்து சேர்ந்துள்ளனர். தென்பகுதியின் காலி அம்பாந் தோட்டை பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றுள்ளனர்.

மட்டு அம்பாறைப்பகுதி கடற்கரைபிரதேசங்களில் விடு தலைப்புலிகளின் மட்டு அம்பாறைஅரசியல்துறையினரும் கடற்புலிகளும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (08)

## மட்டு....

மத்தி கரவெட்டி யாழ்ப்பாணம்)

லெப்டினன்ட்இறையவன்

(அருள்ராசா - சஞ்சயன் முனிகோவிலடி கோப்பாய் தெற்கு கோப்பாய் யாழ்ப்பாணம்)

ஆகியோரே வீரச் சாவடைந்தவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்தி யுள்ளனர்.

# காவல்துறைப் பொறுப்பாளர் வன்னி திரும்பினார்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல்துறை பொறுப் பாளர் பா. நடேசன் அவர்கள் நேற்று வன்னிவந்துசேர்ந்தார்.

தமிழீழ அரசியல்விவகார குழு வில் அங்கம் வகித்து சர்வதேச நாடு களில் பல சந்திப்புக்களில் கலந்து கொண்டுவிட்டு நேற்றையதினம் பா.நடேசன் அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தினை வந்த டைந்தார்.

அங்கிருந்து நோர்வே அனு சரணையாளர் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினது வழித் துணையுடன் நேற்றுப் பகல் இவர் கிளிநொச்சியை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

-தாக்கப்பட்ட போராளி குறித்து-

# அதிரடிப் படையினருடன் கதைக்கச் சென்ற போதே குயிலின்பன் அடித்து நொருக்கப்பட்டார்

மண்டானை நலன்புரி நிலையத் தில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக் கான பணிகளை மேற்கொள்ளச் சென்ற எங்களுடைய போராளி ஒருவரை விசேட அதிடிரப் படையினரும், பொலிசாரும் தாக்கி யுள்ளனர். இது தொடர்பாக கதைக் கச் சென்ற அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பனும் அவருடன் கூடச்சென்ற ஒன்பது பேரும் அடித்து நொருக்கப்பட்டுள் ளனர் என மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந் திரையன் கூறியுள்ளார்.

நேற்று நண்பகல் இரண்டு மணி யளவில் மண்டானை நலன்புரி நிலை யத்தில் நடைபெற்ற இச் சம்பவம் தொடர்பாக பி.பி.ஸி தமிழோசை வினவியபோதே இளந்திரையன் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

மண்டானை நலன்புரி முகாமில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளை மேற் கொள்ளச் சென்ற போராளி ஒருவரை அந்த நலன்புரி நிலையத்தில் இருந்த பொலிசாரும், அதிரடிப்படையினரும் தாக்கியுள்ளனர். இதனை அறிந்த குயிலின்பன் குழுவினர் சம்வபவம் பற்றி அறியச் சென்றபோது, குயிலின் பனும் அவருடன் சென்ற ஒன்பது பேரும் காஞ்சிரங்குடாவில் உள்ள அதிரடிப்படையினரின் முகாமிலி ருந்து மேலதிகமாகப் படையினர் வர வழைக்கப்பட்டு நலன்புரி நிலை யத்தில் தரித்து நின்ற பொலிசாரும், அதிரடிப்படையினரும் சேர்ந்து அடித்து நொருக்கியுள்ளனர்.

குயிலின்பனும் இந்த ஒன்பது பேரும் துப்பாக்கியின் பின்புறத் தாலும் , மரக்கட்டைகளாலும் தாக்கப் பட்டுள்ளனர். இவை ஏற்கனவே அந்த முகாமில் வைக்கப்பட்டிருந்துள்ளது. இதேசமயம் காஞ்சிரங்குடா வழியாகச் சென்ற மேலும் மூன்று போராளி களையும் விசேட அதிரடிப்படையினர் தாக்கியுள்ளனர். இதனையடுத்து மண்டானை நலன்புரி நிலையத்தில் உள்ள சுனாமி கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது முகாமில் தங்கியுள்ள படையினர் உடனடியாக வெளியோற வேண்டும் எனவும் அவர் கள் வெளியேறாத வரை அங்கு நிலைமையைப் பார்க்கச் சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினரைத் திரும்பிச் செல்ல அனு மதிக்கப் போவதில்லை எனவும், தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் உறுப்பினர் அங்கு சென்று வலுக்கட்டாயமாகஒருவரை அமைப்பில்இணைக்க முற்பட்ட வேளை அங்குள்ள மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும், அதனாலேயே விசேட அதிரடிப் படையினர் தலை யிட்டதாகவும் இராணுவம் கூறுவதாக இளந்திரை யனிடம் கேட்டபோது.

அவர்கள் அது மட்டுமல்ல விடுதலைப்புலிகள் உறுப்பினர் களைத் தாக்கிய படையினர் கூடக் கைகளில் தங்களுக்குக் காயம் ஏற் பட்டதாகக் கூறிப் பொய்யாக மருந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். அப்படியான ஒரு சம்பவம் நடை பெற்றிருந்தால் அந்த மக்கள் ஏன் கிளர்ந்தெழுந்து இராணுவம் வெளியேற வேண்டுமெனச் சொல்ல வேண்டும்.? அவர்கள் தங்களைப் பாதுகாப்பார்கள் என்றால் மக்கள் அவர்களை வெளியேற வேண்டு மென என ஏன் ஆர்ப்பாட்டம் செய் கிறார்கள்.? எனக் கேள்வி எழுப்பிய அவர், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தற்போது தங்களுக்கு தொடர்புகள் இல்லையெனவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பெண்மணிஒருவர் அம்முகாமில் உள்ள மக்களின் பாதுகாப்பிற்காக அங்கே நிற்பதாகவும், தங்களை தனியே விட்டுவிட்டுச் சென்றால் முகாமில் உள்ள படையினர் தங்க ளைப் பழிவாங்கிவிடுவார்கள் எனக் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏனெனில் ஏற்கனவே இது போன்று படையினர் பாண்டியன் குடா வில் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறார்கள் எனஅவர் மேலும் கூறினார்.

## தெற்கு...

பூகம்பம் ஏற்பட்டதாக பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் கடலடிப் பூகம்பம் குறித்து அறிவித்ததைத் தொடர்ந்து சர்வதேச ஊடகங்கள் பெரும் முக்கியத்துவம் அளித்து தகவல்களை வெளியிடத் தொடங் கின. கடந்த டிசம்பர் 26ஆம் திகதி ஏற் பட்டது போன்ற பேரழிவுகள் ஏற்படாதவகையில் முன்னறிவிப்பு செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இந்தோ னேஷியா, தாய்லாந்து இந்தியா, சிறிலங்கா அரசுகள் கரையோரங் களில் இருந்து உள்பிரதேசங்களை நோக்கி மக்களை இடம்பெயருமாறு தொடர்ச்சியான எச்சரிக்கை. அறிவிப் புக்களை வெளியிட்டன.

சிறிலங்கா அரசாங்கம் கரை யோரங்களில் இருந்து மக்களை இரண்டுகிலோமீற்றர் அளவிற்கு உள் நோக்கி இடம்பெயருமாறு கோரிக்கை விடுத்தது.

## வவு...

நடைபெற்ற சமயம் அரசியல் துறையினர் அலுவலகததின் பின் புறம் இருந்தமையால் அவர்கள் எவரும் காயமடையவில்லை யெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்ததையடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட அலுவலர் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வை யிட்டுள்ளார்.

இதேவேளை வவுனியா மாவட்ட நீதிபதி சம்பவம் பற்றிக்கேட்டறிந்த தாகவும் இதுதொடர்பாக சம்பந்தப் பட்டவர்களைக் கைது செய்யுமாறு பொலிசாரிற்கு கட்டளை பிறப்பித் ததாகக் கூறப்படுகின்றது.

## புலிகளின்..

சுனாமிஎச்சரிக்கை தொடர் பாகவும், மக்கள் பாதுகாப்பாக நகர வேண்டிய அவசியம்தொடர்பான அறிவித்தல்களையும் உடனுக்குடன் புலிகளின் குரல் அறிவித்த வண்ணமிருந்தது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது